
www.tamilarangam.net

Raya



# சஞ்சீவி

மலர்.17

Chanchive 17. Udgave





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் 17.

ஒக்டோபர்-நவம்பர்- டிசம்பர்




## உள்ளடக்கம்


3. நோக்கு.

5. கவிதை. (ஒரு இலங்கை அகதியின் இரவுப் பயணங்கள்)

6. கடிதங்கள்.

19. சிறுகதை. (ஒரு அன்னையின் ஆத்மா அழுகிறது)

30. கவிதை (இலைக்கொரு போட்டி இருதா-)

31. கவிதை. (பூமியே)

32. மீராவின் தொடர் நவீனம்.

34. கவிதை (பாடிமுடியாத பல்லவிகள்)

41. குறுக்கெழுத்துப் போட்டி.

46. பேட்டி. (கதகளி)

55. ஈழத்தில் இருந்து ஒரு கடிதம்.


அட்டைப் படம்: S. Sathya 8 år சத்தியா 8 வயது. Tollose

10Kr.

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு


CHANCHIVE
POST BOX - 1205
7500 HOLSTEBRO. D.K.

www.tamilarangam.net



# நோக்கு

டென்மார்க் அரசியல் சாசனம் பந்தி 77 இல் கருத்துச் சுதந்திரம் பற்றி, "

ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனைகளை
அச்சு வடிவிலோ எழுத்து வடிவிலோ அல்லது
பேச்சு மூலமோ வெளிப்படுத்துவதற்கான
சுதந்திரம், பாதுகாப்பு, உத்தரவாதமும்
அளிக்கப்பட்டுள்ளது.", எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று ஐரோப்பாவில் (டென்மார்க்) புகலிடம் பெற்ற தமிழர்கள், ஏறக்குறைய ஏழு வருடங்களைக் கடந்து விட்டனர். இந்த ஏழாண்டு கால இடைவெளியில் பல பத்திரிகைகள் வெளிவந்து மறைந்தும் போயின.

சஞ்சீவி தனது 16வது இதழில் எமது நாட்டு மக்களின் நிலையைப் பற்றி சில செய்திகளை ஆதாரமாக வைத்து தனது கருத்தைச் சொல்லியிருந்தது. இக்கருத்தைச் சொன்னதன் மூலம் பாராட்டுக்களும், கண்டனங்களும் கொண்ட கடிதங்கள் பல வந்தடைந்தன.

இவ்வளவு காலமும், புலம் பெயர்ந்தோர்கள் கலை இலக்கியம் பற்றியும் தமிழ் பண்பாடு, பாரம்பரியம், கலாச்சாரம் பற்றி எழுதும் போது எல்லோரும் மகிழ்ச்சியாகவும், பிரச்சினையின்றியும் இருந்தோம். ஆனால் இன்று எமது சொந்த மண்ணில் அல்லற்படும் எமது மக்களின் பிரச்சினைகள் பற்றிக் கூறியவுடன்

எமக்குள் பல கருத்து முரண்பாடுகள் எழுகின்றன.

எமது சொந்த நாட்டுப் பிரச்சினைகளை தீராமல் ரோமாபுரி எரியும் போது பிடில் வாசித்த மன்னன் போல் சஞ்சீவி-யையும் பிடில் வாசிக்க வேண்டுமென்றா நினைக்கின்றார்கள்.

எமது நாட்டிலே தான் பிரச்சினைகளை முன் வைக்க முடியாதென்றால், மேற்குறிப்பிட்டுள்ள கருத்துச் சுதந்திரமுள்ள இந்த டென்மார்க்கில் நாம் கருத்துக்களை வெளியிடுகின்றோம். அதற்-கான மாற்றுக் கருத்துக்களையும் பிரசுரித்து எமது நாட்டின் நிரந்தர விடிவுக்கு ஒரு ஆரோக்கியமான கருத்துக் களத்தை அமைப்பதற்கு இங்குள்ள இந்தச் சாதகமான நிலைபற்றி பிறக்கப் போகும் புதிய ஆண்டிலிருந்தாவது எல்லோரும் இதுபற்றிச் சிந்திப்போம்.

மேலும் பிறக்கும் புத்தாண்டிலாவது எமது மண்ணிலும் ஒடுக்கப்படுகின்ற உலகமக்களுக்கும் நல்ல விடிவு கிடைக்க வேண்டுமென சஞ்சீவி விரும்புகின்றது.

— சஞ்சீவி —

## அட்டைப்படம்.

இன்று எமது தாய் மண்ணின் உண்மை நிலையினை எண்ணி கதிரவனே கண்ணீர் வடிக்கும் காட்சியினை தனது கற்பனையிலே வரைந்திருக்கும் எட்டுவயதுக் குழந்தை, ச. சந்தியா வின் ஓவியத்தை சஞ்சீவியின் அட்டைப்படமாக பிரசுரிப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

— சஞ்சீவி —

www.tamilarangam.net



## ஒரு இலங்கை அகதியின்

# இந்திய இரவுப் பயங்கள்

க. இந்திரன்

நான் இந்தியனல்ல.
நான் இலங்கையனுமல்ல.

நான் போராளி என்பீர்களானால்
அது உங்களின் தப்புக்கணக்கு.
நான் போராளி அல்ல என்பீர்களானால்
அது உங்களின் தப்புக்கணக்கே !

இந்த இந்தியத் தெருக்களில்
சந்தேகக் கண்களால்
எனது முகம் சிதைக்கப்படுகிறது.
சந்தேகித்தே
'இந்தியத்தை' தொலைத்தவர்கள் நீங்கள்.

உங்களுக்குத் தேவையானது
நான் யார் என்பதே...!

எந்த முத்திரை உங்களுக்குச் சௌகரியம்
என்பதை
என்னால் எப்படிச் சொல்லமுடியும்?
என் முகத்தின் மீது
எந்த இந்திய முத்திரையையும்
குத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் ஜனநாயகம்,
உங்களுக்கே உரியது.

ஆனால்,
தயவு செய்து

எனக்கெனச் சில மனிதாபிமானத்தையும்
பாரதப் பண்பாட்டையும்
விட்டு வையுங்கள்.

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவினர்க்கு

சஞ்சீவி 'சொல்லநினைத்ததும் சொல்லாமல் போனதும்'. சஞ்சீவி என்ற இந்த விருட்சம் 15 வது இதழையும் பிரசவித்த இந்நிலையில், அது நமது இனப்பிரச்சினை சம்பந்தமாக என்ன கருத்துக்களை மக்கள் மத்தியில் கூறமுற்படுகிறது, என்பது இன்றுவரை ஒரு வெளிப்படுத்தப்படாத கருத்தாகவே உள்ளது. எந்த ஒரு இலக்கியமும் தனது நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியும், அதில் உள்ள குறை நிறைகளையும், அதன் போக்குகளையும் தாராளமாக விமர்சிக்கும் உரிமையை பெற்றிருக்கவேண்டும். வெறுமனேயே கவிதைகளையும், கட்டுரைகளையும், சிறு கதைகளையும் தாங்கி ஒரு மலர் வெளிவருவது ஆயின் அது காலப்போக்கில் இலங்கையில் வெளிவரும் "மித்திரன்" போன்ற பத்திரிகையின் தரத்தையே பெற்றுவிடும்.

ஒரு மலரை வெளியிடும் போது ஏற்படும் பிரச்சினைகள் புரியாதவை அல்ல, அதற்காக ஏற்படும் பயமுறுத்தல்கள், கருத்துப் பிரச்சினைகளால் ஏற்படும் சச்சரவுகளை எழுதிப் புரியவைக்கக் கூடியதும் அல்ல, எனினும் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வெளிவரும் தமிழ் இலக்கிய மலர் என்ற ரீதியில் "சஞ்சீவி" எமது நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், விடுதலை இயக்கங்களை பாரபட்சம் இன்றி விமர்சித்து வழிநடத்திச் செல்ல வேண்டும்.

www.tamilarangam.net



இலங்கையில் மக்களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை, "உண்மைகளை" சொன்ன பல அறிஞர்கள், கல்விமான்கள், மாணவர்கள் அநியாயமாக குரல் வளை நசுக்கப்பட்டு கொல்லப்பட்டமைதான் பல பத்திரிகையாளர்களை சுயமாக எழுதவிடாமல், எழுதிக் கொடுத்ததை மட்டும் பிரசுரிக்கும் நிலைமையை உருவாக்கியது.

எனவே, எப்படியிருப்பினும் காலத்தின் தேவையறிந்து சஞ்சீவி நியாயமானதை எழுதுமாயின் சஞ்சீவியின் பக்கங்களை பல புதிய எழுத்தாளர்கள் நியாயமான முறையில் அலங்கரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வளரட்டும் சஞ்சீவி.

அன்புடன்
செல்வா- சின்னத்தம்பி
இலண்டன்.

---

*அன்பான சஞ்சீவி ஆசியர் குழுவிற்கு*

தங்களின் சஞ்சீவி மலர் 16 கிடைக்கப்பெற்றேன். இதுவரை வெளிவந்த சஞ்சீவியிலிருந்து முற்றிலும் மாறுபாடு கொண்டதாகக் காணப்பட்டது. நாம் தங்களை ஒரு இயக்கம் சாராதவர்கள் என எண்ணினோம். இதழ் 16ன் மூலம் தங்களால் சொல்லப்பட்ட விஷயங்கள் மிகவும் நன்று. எனினும் தங்களை ஏதோ ஒரு தமிழ் ஈழவிடுதலை இயக்க ஆதரவாளர் என எண்ண இடமுண்டு. இவ்விடயம் மிகவும் முக்கியமானது. சமீபகாலங்களில் இயக்கநபர்கள் ஒருவரை ஒருவர் தாக்கி எழுதிவருவதால் தங்களையும் ஏதும் இயக்கம் சார்பானவர்கள் என சந்தேகிக்க இடம் உண்டு.

நீங்கள் E.P.R.L.F வா? T.E.L.O வா? P.L.O.T ஆ, E.R.O.S ஆ என்பதை பகிரங்கப் படுத்துவது தங்களின் நேர்மைக்கு எடுத்துக் காட்டாக இருக்கும், என் போன்ற வாசகர்கட்கும் உதவும்.—

www.tamilarangam.net



ஏனெனில் நான் எந்த தமிழீழ விடுதலை இயக்கத்தையும் சாரா-தவன். சஞ்சீவி புலிகளின் குறைகளைச் சுட்டுவது போல மற்ற இயக்கங்களின் குறைகளையும் துணிந்து எழுதுமா என்பதை அறிய ஆவலாய் உள்ளேன்.

மேலும் இதழ் 15ல் வெளிவந்த "இந்திய இசையின் ஒரு-துளி", "சிறுவர்மலர்", முன்னுரை, மிகவும் நன்று. இதழ் 16 முன்னுரை-யும் நியாயமானதாக உள்ளது. தங்களின் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். தொடர்ந்து சஞ்சீவியை வெளிக் கொண்டுவாருங்-கள். இதழ் 16ன் அட்டைப்படம் மிகவும் சிறப்பாக அமைந்து ள்ளது

நட்புடன்
யோகன். (ஜேர்மனி).

## சற்றுச் சிந்தியுங்கள்....!!!

இன்று எமது நாட்டுப் பிரச்சினையினைக் காரணம் காட்டி நாமெல்லாம் ஐரோப்பாவிற்கு வந்துள்ளோம். எங்க ளில் பலர் சிறிலங்கா அரசாங்கத்தால் நேரடியாகப் பாதி-க்கப்பட்டவர்கள் என்றும், சிலர் புலிகளால் பாதிக்கப்-பட்டோம் என்றும் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். டென்மார்க்கில் வாழும் எங்களில் சிறுதொகையினர் மாத்-திரமே இங்கு என்ன நடைபெறுகின்றது என்பதைப் பற் றிச் சிந்திக்கிறார்கள். பெரும்பான்மையானோருக்கு இங்கு வெள்ளையர்கள் தவிர்ந்த மற்றைய இனத்தவர்களுக்கு எ-திராக நடந்துவரும் "வெளிநாட்டவர்களுக்கு எதிரான நட-வடிக்கைகள்" பற்றித் தெளிவாக இன்னும் தெரியாது.
ஏன் இப்படியான பிரச்சினை நடைபெறுகின்றது? இதற்கான பின்-னணி என்ன? ஏன் இதைத் தடுப்பதற்கு பெரும்பாலான வெள் ளையர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை?

இப்படியான பல கேள்விகளுக்கு பலரால் தெளிவாக ப் பதில் கொடுக்கமுடியாது ஏன்! எமது நாட்டுப் பிரச்சினை

www.tamilarangam.net



யைக் கேட்டால் கூட முற்றாகத் தெளிவுபடுத்தி ஒரு பரந்துபட்ட கண்ணோட்டத்துடன் பிரச்சினையை அணுகி அதனை விளங்கப்படுத்தமுடியாமல் பலர் உள்ளார்கள். இது மனவருத்தத்திற்குரியதொரு நிலையாகும். இவர்களின் முக்கிய பிரச்சினைகள் ① டெனிஸ் மொழி ② நாட்டு நிலைபற்றிய அக்கறையற்ற நிலையுமே.

இனி மலர்-16 இல் ஆசிரியர்குழுவினர் தங்களின் நோக்கில் நாட்டில் (தமிழீழப்பகுதியில்) உள்ள பொருளாதாரப் பிரச்சினை பற்றி குறிப்பிட்டிருந்தனர். அதில் மக்களின் அவலநிலைக்கு, சிறீலங்கா அரசின் மனிதாபிமானமற்ற தடை காரணம் எனக்கூறப்பட்டுள்ளது. அத்துடன் "தமிழீழ விடுதலைப் புலிகளின்" பத்திரிகைகளில் ஒன்றான "எரிமலை" என்ற பத்திரிகையில் "புலிகள் பொருளாதாரத்தில் நிறைவு கண்டுகொண்டிருக்கிறார்கள்" என்று எழுதியதில் உண்மையேதும் இல்லையென்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

உண்மையான நிலை என்னவென்பதை நாம் தற்சமயம் வாழும் நாட்டினை உதாரணமாக எடுத்து ஒப்பிட்டுப்பார்ப்போம். இந்த நாட்டின் வெளிநாட்டுக்கடன் கிட்டத்தட்ட 350 மில்லியன் குறோனர். இதற்கான சாதாரண வட்டி 35 மில்லியன் குறோனர். இந்த நாடு கடந்த ஆண்டு பொருளாதாரத்தில் கிட்டத்தட்ட 10 மில்லியன் குறோனர்கள் லாபம் கண்டுள்ளது. இதனை இந்த நாட்டு அரசாங்கம் பெரிய பொருளாதார வெற்றியாகக் கணித்து சந்தோசமடைகிறது. ஆனால் இந்தப் பணம் இவர்களின் கடனுக்கான வட்டியின் 1/3 பங்கினை கட்டக்கூட போதாது. இவர்கள் இந்நிலையிலும் கூட தமது முன்னேற்றத்துக்கான நம்பிக்கையினை கைவிடவில்லை. இதேபோல் தான் தமிழீழ விடுதலைப் புலிகளும் தாம் சிறிதளவு பொருளாதாரத்திலோ அல்லது போராட்டத்திலோ முன்னேற்றமடைந்தால் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்தில் (அது ஒவ்வொரு நாளும் சிறீலங்கா இராணுவத்தின் பயங்கர குண்டுவீச்சுக்கு இலக்காக உள்ள பகுதியில்)

www.tamilarangam.net



பொருளாதாரத்தினை மேம்படுத்துதல் கடினமான விடயம் என்பதில் உங்களிற்குக் கூட சந்தேகமிருக்காது. பல கஷ்டங்களிற்கு மத்தியிலும் தமிழீழ மக்களும், விடுதலைப் புலிகளும் விவசாயத்தில் குறிப்பிட்டளவு முன்னேற்றம் கண்டுவருகிறார்கள் என்பதினை நாம் சிறிது சிந்திக்கவேண்டும், ஆனால் இது அங்குள்ள அனைத்து மக்களுக்கும் போதாது என்பதில் சந்தேகமில்லை.

தமிழீழ மக்களின் பற்றாக்குறைகளைத்தீர்க்க விடுதலைப் புலிகளும் தங்களால் இயன்றதைச் செய்கிறார்கள். அதற்காக அவர்கள் பல ஆராட்சிகளையும் நடத்தி வருகின்றார்கள் என்பதும், அதில் சிலவற்றில் நல்ல பயன்கிடைத்துள்ளதையும் இங்கு குறிப்பிடத்தக்கது. உ+ம் : பனங்கள்ளில் எரிபொருள் தயாரிப்பது. இது இன்னும் பொதுமக்களின் பாவனைக்கு முன்வரவில்லை. இதற்கு பொருளாதாரப்பிரச்சினை (பணம்), இயந்திரங்களின் பற்றாக்குறை போன்றன காரணமாக உள்ளது. இதற்கு தமிழ் மக்களாகிய நாமே உதவிசெய்யவேண்டும். ஒரு ஆராட்சி செய்வதென்றால் அதற்கு மூளை மாத்திரம் போதாது, மூலாதாரமும் தேவை, மூலாதாரப் பிரச்சினையினை வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாகிய நாம் தான் தீர்த்துவைக்கவேண்டும்.

எமது நாட்டு மக்களின் உணவு, எரிபொருள் தட்டுப்பாட்டினை தீர்ப்பதற்கு வெளிநாடுகளிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடமோ அல்லது வேறொரு வெளிநாட்டு இயக்கத்திடம் மாத்திரம் பணத்தினைச் சேர்த்துக் கொடுப்பதால் தீர்த்துவிட முடியாது. அது இவ்வுதவி எமது மக்களின் தேவையினை நிரந்தரமாகத்தீர்க்காது. அதற்கு தமிழீழ மக்களின் புதிய பயிர்ச்செய்கை மூலமும், நாட்டில் புதிய ஆராட்சிகள் நடாத்தி அவர்கள் கண்டுபிடிக்கும் உற்பத்தினூடாகவே இதனைத்தீர்த்துக் கொள்ள முடியும். இதற்காக ஏராளமான பணம் தேவைப்படும். நாம் எம்மால் இயன்ற உதவிகளை ஒன்றிணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு செய்வதன் மூலம் நாட்டு மக்களின் தேவைகளை

www.tamilarangam.net



# செய்திகள்

அவசரகால நிலைமை நீடிக்க ஆதரவாக செப்டம்பர் 26ந் திகதியன்று ஈ.ரோஸ் பாராளமன்ற உறுப்பினர்கள் இருவர் பாராளுமன்றத்தில் வாக்களித்துள்ளார்கள்.

வழக்கறிஞர்களும் மேதைகளுமான திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம், திரு திருச்செல்வம் அவர்களும் மந்திரிகளாக இருந்த காலத்தில் தான் இவ்விரு தலைவர்களின் அனுசரணையோடும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இந்த இரண்டு தலைமைகளின் ஒற்றுமைகளையும் இனம் கண்டுகொள்ள மக்கள் தவறக் கூடாது.

ப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

விடுதலைப் புலிகளின் பிழைகளினைச் சுட்டிக்காட்டுபவர்கள், ஏன்தான் விடுதலைப் புலிகள் சரியாகச் செய்யும் விடயங்களை பொருட்படுத்துகின்றார்களோ தெரியவில்லை. அன்பான ஆசிரியர் குழுவே, உங்களுடைய அரசியல் கொள்கை புலிகளினுடையதை விட வித்தியாசமாக இருப்பதால் அவர்களை நீங்கள் ஆதரிப்பதில்லை. அப்படியென்றால் எமது நாட்டுப்பிரச்சினை சம்பந்தமாகன உங்களது கொள்கைதான் என்ன? நீங்கள் யாரை ஆதரிக்கிறீர்கள்? சிறிலங்கா அரசையா? or விடுதலைப் புலிகளையா? or பொது மக்களாகிய எங்களுக்குத் தெரியாத 3வது சக்தியையா?

விடுதலைப் புலிகள்ன் பிழைகளை பிழைகூறும் நீங்கள், எமது நாட்டிற்குத் தேவையான / அமையக்கூடிய அரசியல் முறையையோ or பொருளாதார முறையையோ ஏன் நீங்கள் சஞ்சீவியில் முன்வைக்கக் கூடாது? தூண்டில், புதிய ஜனநாயகம், தேனீ போன்ற பத்திரிகைகள் போல் மற்றவர்களை திட்டித் திட்டியே நீங்களும் காலத்தைப் போக்கப் போகின்றீர்களா?

www.tamilarangam.net



தமிழர்களுக்கு ஒரு தமிழீழம் தேவையென்பதை ஐரோப்பாவில் வெளிநாட்டவருக்கு எதிராக நடந்துவரும் அடாவடித்தனங்கள் மூலமும், இந்தியாவில் எமது நாட்டு அப்பாவி மக்களுக்கு எதிராக நடந்துவரும் அடாவடித்தனங்கள் மூலமும் நாங்கள் உணரக்கூடியதாக உள்ளது. இதேவேளை தற்சமயம் விடுதலைப்புலிகள்தான் எமது மண்ணைக் காப்பாற்றுவதிலும், மீட்டெடுப்பதிலும், எமது மக்களைப் பாதுகாப்பதிலும் பொறுப்பாக இயங்கிவருகிறார்கள். எமக்கு சுதந்திரம் கிடைக்கும் போது தமிழீழத்தில் "வாக்கெடுப்பு" நடத்துவதாகவும் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்கள். ஆகவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து அவர்களுக்கு உதவுவதே, எங்களிற்கு உதவாவிடினும் இனிவரும் இளம் சமூகத்திற்கு உதவியாக இருக்கும்.

- நன்றி -

இப்படிக்கு

பொன். மகேஸ்வரன்.

## குறிப்பு:

திரு. பொன்மகேஸ்வரன் அவர்களின் கடிதத்திற்கு பக் 13 இல் கொடுக்கப்பட்டிருக்கும் பதிலானது, மற்றைய கடிதங்களுக்கும் பதிலாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

## முக்கிய அறிவித்தல்.

சஞ்சீவியின் இரண்டாவது கலந்துரையாடல் மிகவிரைவில் இடம்பெறவுள்ளது. இதில் பங்குகொள்ள விரும்பும் வாசகர், எழுத்தாளர்கள் சஞ்சீவியுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.

_ சஞ்சீவி -

www.tamilarangam.net



# எல்லோரும் சிந்திப்போம்

அன்புடன் பொன்-மகேஸ்வரன் அவர்கட்கும், அவர் சார்ந்த கருத்துடையவர்கட்கும், எதிரான கருத்துடையவர்கட்கும்

டென்மார்க் [ஐரோப்பா] இல் அரசியல் தஞ்சம் கோருபவரின் மனநிலையானது சொந்தப் பாதிப்புக்களாலும் இங்குள்ள நிலவரத்தை அவதானித்து அதற்குத் தகுந்தாற் போல் வாக்கு மூலம் கொடுப்பதன் மூலம், இங்கு தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வது சாதாரண மனித இயல்பே. இந்த விடயத்தில் சஞ்சீவி கைவைக்க விரும்பவில்லை.

நீங்கள் குறிப்பிட்ட புதியநாசிஸ்ற் பற்றிய நடவடிக்கைகள் தனியாக அலச வேண்டிய பிரச்சினை.

மலர் 16இல் எமது நோக்குப் பற்றிய உங்களது கருத்துக்களைக் கவனிப்போம்.

"ஒரு புறம் இலங்கை அரசின் செய்தி ஸ்தாபனங்கள் தங்களுடைய கருத்துக்களையும், இன்னொரு புறம் - புலியினர் தங்களுடைய ஒரு பக்கச் சார்பான கருத்துக்களை வெளியிடுவதாலும் மக்களுடைய உண்மையான அடிப்படைப் பிரச்சினைகள் மழுங்கடிக்கப்படுகின்றது." என்பதை குறிப்பிட்டிருந்தோம்.

நீங்கள் கூறியது போல் புலிகளின் பொருளாதாரப் பிரச்சினைகளை சுட்டிக் காட்டுவதற்கு டென்மார்க்கின் பொருளாதார நிலையினை உதாரணம் காட்டியது பலருக்கு விளக்கமாகவும் எங்களுக்கு விளங்கப்படுத்துவதற்கும் இலகுவாகவும்

www.tamilarangam.net


இருக்கின்றது.

டென்மார்க்கின் இன்றைய வளர்ச்சிக்குக் காரணம் குறைந்தது 100 வருடங்களாக கருத்துச் சுதந்திர அடிப்படையில் எல்லோரும் [அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள், தனித்தலைவர்கள், போன்றோர்] விவாதித்து வந்தமையே டென்மார்க்கின் இன்றைய நிலைக்குக் காரணம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகத்திலேயே "சிறந்த சமூகநலன் பேணும் அரசு" எனத் தெரிவு செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது. இருப்பினும் நீங்கள் குறிப்பிட்ட டென்மார்க்கின் கடன் வீதங்களும் வட்டி வீதங்களும் இந்த நூறுவருட காலத்தின் அனுபவத்தின் அடிப்படையில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. ஆனால் போராட்டச் சூழ்நிலையிலும் அரச அடக்குமுறையில் உள்ளாகியிருக்கும் எமது மண்ணில் பப்பாசிக்காய், தாமரைக் கிழங்கு போன்றவற்றைச் சாப்பிடும் நிலையிலும் பட்டினிச் சாவு, வாந்திபேதி போன்ற தொற்று நோய்களினாலும் இன்று மக்கள் இறக்கின்றார்கள். இந்த நிலையில் "எரிமலை" புலிகளின் சொந்த வளர்ச்சியைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வதில் என்ன நியாயம்.... நீங்கள் குறிப்பிடும் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்மக்களும் கலந்து கொள்கின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் குறிப்பிடும் மக்கள் என்றது புலிகளையும் புலி ஆதரவாளர்களையும் மட்டும் குறிப்பிடுவதாயின் சரியானதே.

மேலும் புலிகளின் ஆய்வு பற்றியும், ஆராய்ச்சி பற்றியும் அதற்கான மூளைபற்றியும் மூலாதாரம் பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள். புலிகளின் ஆய்வில் "கள்" முக்கிய பங்கு வகிக்கின்றது. தமிழரசுக் கட்சிக் காலம் தொடக்கம் கூட்டணிக் காலம் வரையும் திரு துரைரத்தினம் MP. அவர்களின் பனங்கள்

ளுப் பகுதி போய் இப்ப கிள்ளில் ஆராய்ச்சி தொடங்கியுள்ளது. இது வரவேற்கத் தக்கதே. சீவல் தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினைகளை முன்வைத்த திரு செங்கதிர் அவர்கள் [விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்] அவர் சார்ந்த இயக்கத்தினாலேயே மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால் சீவல் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத பட்சத்தில் ஆய்வுகள் எந்தளவிற்கு வெற்றியளிக்குமென எதிர்பார்க்கமுடியும். ஏனெனில் போதியளவு கள் கிடைக்காது.

நீங்கள் குறிப்பிட்டது போல் [பொதுஸ்தாபனங்கள்] செஞ்சிலுவைச் சங்கங்களுக்கு பணம் அனுப்புவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் புலிகளுக்குப் பணம் அனுப்புவதன் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றும் கூறுகின்றீர்கள். ஆனால் நடைமுறையில் இன்று செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்கு மிகவும் முக்கியம் பெறுகின்றது. இந்த அமைப்பைப் புலிகளும், அரசும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அரசு சார்பற்ற பொதுஸ்தாபனங்களுக்கு உதவி செய்வது தான் மிகவும் பொருத்தமானது. ஆனால் புலி ஆதரவாளர்களை புலிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என நாம் சொல்லவில்லை. அதை எதிர்க்கவும் இல்லை.

சிங்களப் பௌத்த பேரினவாத அரசின் இன அழிப்பு, பிரதேச கபளீகரம் போன்ற அடக்கு முறைகளுக்கு எதிராக எமது இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் மீட்பதற்காக எல்லாத் தமிழ் இயக்கங்களும் சரியானதைச் செய்வதற்காகவே முன்வந்தன. ஆனால் கால ஓட்டத்தில் கள்வர்களாகவும், தீயவர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் மாறிய இந்நிலையில் புலிகளின் விட்டுக் கொடுக்காத போராட்டக் குணாம்சத்தை [இலங்கை அரசு- இந்திய அரசு] நாங்கள்

www.tamilarangam.net


வரவேற்கின்றோம். ஆனால் நாங்கள் எங்கே முரண்படுகின்றோம் என்பதைத் தான் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழீழப் போராட்டமானது 1980 வரைக்கும் ஒரு மந்தப் போக்கையே கொண்டிருந்தது. 1980க்குப் பின்னர் ஒரு தேசிய ப்பிரச்சினையாக உருவெடுத்து வேறுபட்ட சிந்தனையாளர்களையும் உள்வாங்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்திய அரசின் கையாலாகாமையால் தமது நாட்டு அரசியல் சிந்தனையை ஒத்தவர்களுக்கே இயக்கங்களுக்குள் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்திய அரசுக்கு சிந்தகம் விளைவிக்கக் கூடிய ருசுக விஞ்ஞானக் கண்ணோட்டமுள்ள சிந்தனையாளர்களை அழிப்பதில் இந்திய உளவுஸ்தாபனம் [RAW] ஆர்வம் காட்டியது. ஆனால் இந்திய இராணுவம் இலங்கைக்குள் பிரவேசிக்கும் வரைக்கும் இயக்கங்களுக்கு இந்தியாவைப் பற்றிய பூரண தெளிவிருக்கவில்லை. இந்திய இராணுவம் வந்த பின்னர் தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய [கொள்கை - நடைமுறை] நிர்ப்பந்தத்துக்குள்ளாகினர். ஆனால் அன்றைய நேரத்தின் பலம் வாய்ந்த ஸ்தாபன ரீதியாக இருந்த புலி இயக்கமோ தமது கொள்கை பற்றி எதுவிதப் பரிசீலனைகளையும் செய்யாது தமது இராணுவ விஸ்தரிப்பில் மட்டும் கவனம் செலுத்தியமையும் அதற்காக இந்திய அரசிடமே பணத்தை வாங்கியதும் எல்லோரும் அறிந்ததே.

அரசியல் அற்ற இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதாகவே இவர்கள் கொள்கை அமைகின்றது.

உ+ம் :- அண்மையில் புலிகளால் சிங்கள மக்களுக்கு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"இனமத பால் கோட்பாடு பேதமின்றி ஒவ்வொரு பிரஜையினதும் உரிமைகளை மதித்தும் பேணிக் காத்தும் வருவது எமது போரா

www.tamilarangam.net



மடத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

கடந்த கால நடவடிக்கைகளுக்கும் இவர்களது கொள்கைகளுக்கும் முற்றிலும் முரண்பட்டதாகவே காணப்படுகின்றது.

உ+ம் :- முஸ்லிம் மக்களை விரட்டியடித்தமை, சிங்களப் பொதுமக்களைக் கொன்று குவித்தமை, மாற்றுக் கருத்துக் கொண்ட இயக்கத்தினரையும், பொதுமக்களையும் கொலை செய்தமையைக் குறிப்பிடலாம்.

பொன் மகேஸ்வரன் அவர்களே நீங்கள் கேட்டுக் கொண்டதன் பிரகாரம்

"எமது நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக உங்களது கொள்கைதான் என்ன? நீங்கள் யாரை ஆதரிக்கின்றீர்கள்....? ஸ்ரீலங்கா அரசையா...? அல்லது விடுதலைப்புலிகளையா...? அல்லது பொது மக்களாகிய எங்களுக்குத் தெரியாத இன்னொரு மூன்றாவது சக்தியையா...?

பொதுமக்கள் என்ற பதத்தினை இன்று பரவலாக எல்லோரும் பாவிக்கின்றார்கள். இது ஒரு பலமான கேடயமே. இதற்குள் பொன். மகேஸ்வரன் அவர்கள் தம்மையும் உட்படுத்திக் கொள்வது தான் வேடிக்கையாக இருக்கின்றது. ஆனால் இவருடைய கருத்துக்கள் எந்த ஸ்தாபனத்தைப் பிரதிபலிக்கின்றது என்பது பூரணமாக விளங்குகின்றது.

சஞ்சீவி என்பது டென்மார்க்கில் வெளியாகும் ஒரு தமிழ்ப் பத்திரிகை. இப்பத்திரிகையினை எவ்வாறு இயக்க வேண்டும் என்பது பற்றிய முடிவுகளை சஞ்சீவி மலர் 14இல் வெளியிட்டிருந்தோம்.

www.tamilarangam.net


GRUNDLOV §77 [CONSTITUTION] அரசியல் சாசனம் பந்தி 77 இல் கருத்துச் சுதந்திரம் பற்றி

"ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனைகளை அச்சுவடிவிலோ எழுத்து வடிவிலோ அல்லது பேச்சு மூலமோ வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும், பாதுகாப்பும், உத்தரவாதமும் அளிக்கப்பட்டுள்ளது."

இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே சஞ்சீவி வெளிவருகின்றது. நீங்கள் கேட்டுக் கொண்ட விடுதலைப் புலிகளையோ வேறு இயக்கங்களையோ, இலங்கை அரசையோ, பொதுமக்களுக்குத் தெரியாத இன்னொரு சக்தியையோ நாம் ஆதரிக்கவில்லை. ஆனால் பொதுமக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு அவர்களின் அபிலாசைகளை பிரதிபலிப்பதுடன் தமிழ் பேசும் மக்கள் கௌரவமாகவும் சுயமரியாதையாகவும் வாழக்கூடிய நல்ல நிரந்தரத் தீர்வை வேண்டி நிற்கின்றோம்.

நீங்கள் குறிப்பிட்ட கடைசிப் பக்கத்தில் புரிதாக நாம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் வாக்கெடுப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். சாதாரண பல்கலைக்கழக புத்திஜீவிகளேயே சுயாதீனமாக இயங்க அனுமதிக்காத போது வாக்கெடுப்பு என்பது கேலிக்கூத்தாக இருக்கும் என்பது எமது கருத்தாகும்.

- நன்றி -

"சஞ்சீவி"

தந்தை:- ஏன்டா பரீட்சை ஹாலில் தூங்கிக்கிட்டிருந்தியாமே...!

மகன்:- நீங்க தானே அப்பா சொன்னீங்க.... தெரியாத கேள்வி வந்தால் முழிச்சுக் கிட்டு இருக்காதேன்னு...!

# ஒரு அன்னையின் ஆத்மா அழுகிறது



கனடாவிலிருந்து
கே.பி.லிங்கம்

நடு இரவு கடுங்குளிர், அவனது உடலை இதமாக மிக, மிக, இலகுவாகத் தாக்கத் தொடங்கியது. மனைவியின் போர்வைக்குள் தன்னை இழுத்து மூடிக் கொண்டான். இருந்தாலும் நித்திரை கொள்ள அவனால் முடியவில்லை, என்றுமில்லாத வாறு அன்று அறை குளிர்ந்து கொண்டே இருந்தது. எழும்ப மனமில்லாது எழும்பிச் சென்று "கீற்றரை" தொட்டுப் பார்த்தான். அதுவும் குளிர்ந்து கொண்டே இருந்தது.

மீண்டும் படுக்கையில் வீழ்ந்து கொண்டான். வெளியே சற்றுக் குளிர் காற்றுடன் பனிமழை பெய்து கொண்டே இருந்தது.

ஆனால்...

அவனால் நித்திரை கொள்ள முடியவில்லை, சற்றுக் கண்களை இறுக்க மூடிக் கொண்டாலும் நித்திரை வருவதாக இல்லை.

மீண்டும்..... மீண்டும் கண்களை இறுக்கிக் கொண்டான். சற்றுத் தாமதமாக நித்திரை வந்து கொண்டிருந்தது.

உறக்கம் அவனை அணைக்கத் தொடங்கியது.

www.tamilarangam.net


கண்கள் சற்று அயர்ந்து விட்டது.

சில நிமிடங்கள் ..........

ரெலிபோன் மணி அலறத் தொடங்கியது. உறக்கத்தில் இருந்தவனை உலக்கையால் அடித்து எழுப்பியது போல ஓர் உணர்வு. வெறுப் போடும் சினத்தோடும் எட்டி எடுக்க முயன்றான். முடியவில்லை, எழும்புவதற்கு சற்று அலுத்துக் கொண்டு திரும்பி அடுத்த பக்கம் படுத்துக் கொண்டான்.

ரெலிபோன் மணி அடித்துக் கொண்டே இருந்தது. பல முறை தொடர்ச்சியாக அடித்துக் கொண்டே இருந்தது. நேரம் தெரியவில்லை, பொறுமையை இழந்த நிலையில் ரெலிபோனைத் தூக்கினான். அதிகாலை நான்கு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது.

ஹலோ... ஹலோ.....

நான் கொழும்பிலிருந்து மணி.....

குரல் கேட்டதும் ரெலிபோனை அடித்து வைத்துவிட்டான்.

யார் இந்த நேரத்திலே......?

அலுப்புத் தட்டிக் கொண்டு மனைவியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் படுக்கையில் வீழ்ந்து விட்டான். குளிர் மீண்டும் அவனைச் சேட்டை பண்ணத் தொடங்கியது.

மீண்டும் மனைவியின் போர்வைக்குள் சுருண்டு விட்டான். சில நிமிடங்கள் மீண்டும் மீண்டும் ரெலிபோன் அடிக்கத் தொடங்கியது... மீண்டும் அந்தச் சத்தத்தை கேட்கக் கூடிய மனவலுவும் அவனிடம் இல்லைப் போலும் பாய்ந்து

www.tamilarangam.net


சென்று "வயறை" பிடுங்கி எறிந்து விட்டுப் படுத்துக் கொண்டான். கண் விழித்துப் பார்த்த போது நண்பகல் பன்னிரெண்டைத் தாண்டி முள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. பஞ்சியை முறித்துக் கொண்டு மீண்டும் வயரை மாட்டி விட்டு பாத்றூம் நோக்கிச் சென்று விட்டான்.

*

மீண்டும் ரெலிபோன் மணி அடிக்கத் தொடங்கியது. அவனது மனமும் மீண்டும் குழம்பத் தொடங்கியது. ஏதும் தொழிம்புக் கோலாக இருக்குமோ என்ற அச்சம் அவனை மீண்டும் தாக்கத் தொடங்கியது.

என்ன செய்வது......? ரெலிபோனை அவனது கரம் பற்றிக் கொண்டது.

ஹலோ ஆர் பேசுறது... சற்றுப் பதட்டத்தோடு கேட்டான்.

"நான் ரவி"

"என்ன கனநாளைக்குப் பிறகு ரெலிபோன்"

"நானும் இப்ப ஐஞ்சாறுதரம் எடுத்துப் பார்த்தனான் ஒரே எங்கேச்சா இருந்தது என்ன விசயம்....?

"ஒன்றுமில்லை இரவிலே தேவையில்லாத கோல் எல்லாம் வருகுது. அது தான் கிளறச்சு விட்டிட்டுப் படுத்தனான்"

"நீ எத்தனை மணிக்கு வேலைக்குப் போறனி..."

"மூன்று மணிக்கு"...

"ஏன்"

ஒரு அலுவல் சொல்ல வேணும் அதுதான் வீட்டுக்குவர ரவி சொல்வதை சற்று இழுத்துக் கொண்டான்.

"நீவந்து போக நேரம் காணாது சொல்லு. பக்கத்திலே ஒருத்தரும் இல்லை... சொல்லு..."

www.tamilarangam.net


அவன் அப்படிச் சொன்னதும் சொல்ல வந்ததை எப்படிச் சொல்லிக் கொள்வது என்று மனதுக்குள் போராட்டம் எழத் தொடங்கியது. எப்படியும் சொல்லித் தீர வேண்டும், சொல்லாமலும் விடக்கூடியதாக இல்லை, இதை எப்படியும் சொல்லி விட அவன் திடமாகிவிட்டான்.

"மச்சான் கொந்தான் உனக்கு கொழும்பிலே நின்டு ரெலிபோன் எடுத்தவராம். ஆரோ அடித்துப் போட்டு வைச்சிட்டினமாம். எடுக்க எடுக்க இருந்தனும் எடுக்கவில்லையாம் எனக் குறைப்பட்டுச் சொன்னார்."

ஏனாம் எடுத்தவராம் .........? சற்று வெறுப்போடு கேட்டான். இரண்டு கிழமைக்கு முன்னர் உன்ரை அம்மா செத்துப் போனாராம். அதைச் சொல்லத்தான் வந்தவராம். சாப்பாட்டுக்கே பெரிய கஸ்ரமாம். காசு இருந்திருந்தால் கொம்மாவை தப்பவைத்திருக்கலாம். தாங்களோ அப்படியும் இப்படியும் தானாம்.

நீயும் காசும், கடிதமும் அனுப்பியும் எத்தனையோ வருஷமாம், தங்களையெல்லாம் ஏமாத்திப் போட்டாயாம், மனுசி சாகேக்கை உன்னைத் தானாம் கேட்டவ, உன்ரை பிள்ளையின்ரை படம் கூட அனுப்பவில்லை என்டு அழுது கொண்டு தான் சொன்னவர். என்னையும் கொஞ்சப் பணம் இருந்தால் தாவெண்டும் கேட்டவர். என்ரை நிலை உனக்குத் தெரியும் தானே.....? இருந்தாலும் நான் கொஞ்சம் அனுப்பத் தான் போறேன்.

அவன் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டதை அவன் விரும்பா விட்டாலும் அவனது தாய் இறந்து விட்டாள் என்ற செய்தி அவனது மரமண்டைக்குள் ஈட்டியால் குத்துவது போலிருந்தது.

www.tamilarangam.net



மேலும் கேட்கவோ கதைக்கவோ தைரியமற்றவனாக ரெலி போனை வைத்துவிட்டான்.

இறப்பை யாராலும் தாங்கிக்கொள்ள முடியாது. இதற்கு அவன் விதிவிலக்கானவன் அல்ல. என்ன இருந்தாலும் தாயல்லவா...?

அவனையறியாமல் கண்களால் கண்ணீர் வழிந்தது. கண்ணீர் அவனது உடலை நனைத்து விட்டது. அப்படியே சோபாவில் சாய்ந்து விட்டான்.

தாய் இறந்த செய்தி இவ்விடம் பலருக்குத் தெரிந்தும் ஒருசில தூரத்து நண்பர்களையும் சில உறவினர்களையும் தவிர பலர் துக்கம் விசாரிக்க வந்ததாகச் செய்தி இல்லை. இவனது நெஞ்சத்தை தாக்கியது. யாரையும் வெறுக்கவோ குறை கூறவோ அவனால் முடியவில்லை. அந்தியேட்டி பெரிதாகச் செய்ய வேண்டும் என்று மனதுக்குள் விரும்பி இருந்தாலும், அழைத்தாலும் வரக்கூடிய மனநிலையில் உறவினர்கள் பலர் இருந்தாலும், தாயின் படத்தை பெரிதாக்கி கோலில் மாட்டி அதற்கொரு மாலையும் போட்டு சிறிய வெளிச்சத்தையும் ஏற்றி வைத்தான். வந்து போகும் நண்பர்கள் கூட இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. நாட்கள் செல்லச் செல்ல இச்சம்பவம் அவனது மனநிலையை நன்கு வாட்டத் தொடங்கியது.

சிறு வயதில் தந்தையை இழந்து படிக்கவென்று புறப்பட்டு மூளைக்கு ஏறாததால் இடைநடுவே படிப்பை நிறுத்தி விட்டு கட்டட வேலைக்குப் போகத் தொடங்கினான். கிழமையில் மூன்று நாட்கள் வேலைக்குப் போவதோடு மீதி நாட்களையும் இரவு படம் பார்ப்பதில் செலவு செய்தான். புதுவிதமான விளை

உயர்ந்த உடைகளை நாடிச் சென்றான். தாயின் நச்சரிப்பு அவனுக்கு ஏதுவதாக இல்லை, எவ்வளவு காலம் தான் அவனால் பொறுக்க முடியும்.



அவனது மூளைக்கும் அறிவிற்கும் தொழில் முறைக்கும் சவூதிஅரேபியா அவனுக்குச் சரியாக அமைந்து விட்டது. சிவராஜன் சவூதிக்குப் போன செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது.

நாட்டு நிலைவரங்கள் சிவராஜனை ஊருக்கு வர தடை செய்தது. ஐந்து வருடங்கள் இழுத்தடித்து ஒருவாறு காலத்தைப் போக்கியவன் பல இன்னல்களுக்குப் பின் ஜேர்மனிக்கு வந்துவிட்டான். கடுமையான வெயிலுக்குப் பழக்கப்பட்டவனுக்கு இந்த நாட்டுக் காலநிலை, வாழ்க்கை முறை எல்லாமே அவனுக்கு விசித்திரமாகவும் புதிதாகவும் இருந்தது.

பனிமழையைக் கண்டு மனம் பூரித்தான்,
குளிர் வரும் போது ஆத்திரப்பட்டான்.

தான் புதியதோர் உலகத்தில் நிற்பதாக எண்ணிக் கொண்டான். புதிதில் நண்பர்கள் என்று யாருடனும் பழகும் பக்குவமும் தென்படவில்லை, வேலை தேடுவதென்றால் மொழிப்பிரச்சினை, படிக்கும் போது தன்னைத் தானே ஏமாற்றியதன் விளைவு இதுதான் என நொந்து கொண்டான். இருந்தாலும் மனம் சளைக்கவில்லை, தேடினான் அலைந்தான், மொழியை அவன் பெரிதாக எண்ணவில்லை, அவனது அதிஸ்டம் 'றெஸ்ரோரண்ட்

www.tamilarangam.net



ஒன்றில் வேலை கிடைத்தது. சோஷல் பணமும் வேலை செய்து கிடைக்கும் பணமும் அவனது பொக்கற்றை நிறைத்தன. இருக்கும் பணத்தை இலங்கைப் பணமாக கணக்குப் பார்த்து அகமகிழ்ந்தான். தன்னை அதிஸ்டதேவதை அணைத்துக் கொண்டதாக எண்ணிக் கொண்டான்.

சில மாதங்களின் பின்னர் கொஞ்சப் பணம் தாயின் பெயருக்கு அனுப்பி வைத்தான். தாய்க்கோ சொல்ல முடியாத மகிழ்ச்சி. தனக்கும் மகனுக்கும் நல்ல காலம் பிறந்துவிட்டதாக எண்ணிக் கொண்டதோடு கடைசிமகனுக்கு ஒதுக்குப் பட்ட காணிக்குள் மணியம் மேஸ்திரி மூலமாக அடிப்போட்டாள். அயலில் சிலபேருக்கு உறைப்பாக இருந்தாலும் சிலர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை, அனுப்பிய பணம் அத்திவாரத்தோடு கரைந்து விட்டது. மகனின் பணத்தை வழிக்கு வழி எதிர்பார்த்தாள், அயலிலுள்ள பலவீடுகளுக்குத் தபாற்காரன் வந்து போனான்.

ஆனால்..

அவளின் வீட்டுப் படலையை தபாற்காரன் தட்டியதாக இல்லை, பலவருடங்களாகிவிட்டது எந்தவிதமான பதில்களும் வராதது அவளது நெஞ்சத்தை வலுவாகத் தாக்கத் தொடங்கியது. மகன் தன்னை கைவிட்டு விடுவானோ என்ற பயம். உள்மனதில் இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ள அவளால் முடியவில்லை, நாட்கள் செல்லச் செல்ல அவள் நடக்கமுடியாத முடக்கு வாதத்தால் படுக்கையில் வீழ்ந்து விட்டாள்.

---

ஒருவர்:- டெலிவிசனால் பிள்ளைகள் கெட்டுப் போறதா சொல்லுறாங்களே! நீங்கள் என்ன நினைக்கிறீங்க?

மற்றவர்:- அது தெரியவில்லை. ஆனால் எங்க வீட்டு டெலிவிசன் கெட்டுப்போனது எங்க பிள்ளைகளால் தான்.!

www.tamilarangam.net



தான் இறந்து விட முன் கொஞ்சப் பணம் அனுப்பி விடு, என்று தாய் எழுதிய கடிதங்களை காணும் போது ஒரு விதமான ஆத்திரம் வரத் தொடங்கியது. தங்கையிடமிருந்து வந்த பாசமான கடிதங்கள் அவனது வாழ்க்கை முறைக்கு எதிராகவே இருந்தது. அவன் இவர்களை விட்டு வெகுதூரம் சென்று விட்டான். இதைப்புரிந்து கொள்ள முடியாத அவள் அவனை கடிதங்களால் துரத்தத் தொடங்கினாள்.

நாட்டு நிலவரங்கள் இவளது கிராமத்தை நன்றாகப் பாதித்து விட்டது. யாருமே இருக்க முடியாத நிலை, படுக்கையில் வீழ்ந்து விட்ட அவளை இழுத்துக் கொண்டு போவது மகளுக்குப் பெரிய வேலையாகி விட்டது. திருமணமாகாமல் காலம் கழிந்து கொண்டு போவதும் மகன் தன்னையும் மகளையும் ஏமாற்றி விட்டதும், தான் இறந்து விடுவேன என்ற பயமும் அவளின் மனத்திரையில் ஓடத் தொடங்கியது. மகளைக் காணும் போது அழத் தொடங்கிவிட்டாள்.

அகதிகளாக மாற்றுக் கிராமத்துக்கு போன இவர்கள் பலமாதம் தங்கிவிட்டனர். பக்கத்து வீட்டுக்காரப் பையன் அவளை விரும்பி விட்டான். ஒரு புறம் அண்ணன் வெளிநாட்டிலிருக்கும் நினைப்பு, தான் வளமாக வாழலாம்; ஜேர்மனிக்குப் போகலாம் என்ற நம்பிக்கையில் அவளின் கைகளைப் பிடித்தவனுக்கு பணமோ கடிதமோ இவர்களை நாடி வரவில்லை.

சில நாட்களின் பின்னர் இருவரும் கொழும்புக்கு வந்து விட்டனர். எல்லோரும் தங்கள் உறவினர்களுடன் கதைக்கும் போது நாங்கள் ஏன் கதைக்கக் கூடாது என்ற கேள்வி அவளின் மனதுக்கு எழ நியாயம் என இருந்தாலும் அண்ணன் தன்னோடு கதைப்பானோ என்ற

பயமும் அவளிடம் நிறையவே இருந்தது.

வந்த ஒரு கிழமையாகிவிட்டது. அண்ணனிட மிருந்து ஒரு அழைப்பும் இல்லை,

இரண்டாவது கிழமை.... இரவு பகலாக விழித்திருந்தாள் அழைப்பு வரவே இல்லை, அண்ணன் தன்னை ஏமாற்றிவிட்டதாக எண்ணிக் கொண்டாள். அவளை அறியாது கண்ணீர் வழியத் தொடங்கியது.

நாட்கள் செல்லச் செல்ல அவளது கணவனுக்கு சற்று உண்மை புலப்படத் தொடங்கியது. மாறிக்கொண்டு வந்த பணமும் கரைந்து விட்டது. மூக்கு முட்ட தண்ணி போட்டுக் கொண்டு வந்து அவளைத் தாறுமாறாக அடித்து விட்டான். தான் மனதுக்குள் நினைத்த ஆசைகள் நிறைவேறாத கோபம் ஒருபுறம், தான் நம்பி ஏமாந்து விட்ட நினைப்பு மறுபுறம், அவனது கோபத்தை மேலும் தூண்டி விடவே அவளை மேலும் அடித்து விட்டான்.

எதிர்பாராமல் அடிவிழுந்து அழுத சத்தம் ஒரு கணம் அந்த வீதியை அதிர வைத்தது.

என்ன...?

ஏது....? என்று இருந்தவர்கள் அங்கலாய்க்கத் தொடங்கிவிட்டனர்.

கோபத்தை அடக்க முடியாமல் அவன் அடித்து கொண்டே இருந்தான்.

---

"உலகிலுள்ள ஜீவராசிகளுக்குள்ளேயே அதன் உருவத்தோடு ஒப்பிடும் போது மிகப் பெரிய மூளை எறும்புகளுக்குத் தான் இருக்கின்றது."

www.tamilarangam.net


புதிய உலகம், புதுமையான வாழ்க்கை இவனுக்கு நன்கு பிடித்து விட்டது. படம் பார்க்கும் போது ஏற்பட்ட உடைகளின் மோகம் சிவராஜனை இன்னும் விட்டு அகலவில்லை, தனக்காக அதிகம் செலவு செய்வதோடு இடைக்கிடை சிலநண்பர்களுக்கும் அன்பளிப்புக்கள் செய்து கொண்டான். மற்றையவர்கள் வசதியுள்ளவன் என்று எண்ணும் அளவிற்கு செலவுகள் செய்து மகிழ்ந்தான்.

சிறுவயதிலிருந்தே இவனுக்காக இருந்த தாய்மாமன் மகளை கல்யாணம் செய்து கொள். இதையாவது நீ எனக்காக செய்து கொள் மகனே என்று கடைசியாக தாய் எழுதிய கடிதம் அந்த நேரமே அதைக் கசக்கி எறிந்துவிட்டான்.

தன்னைக் கேட்காமல் ஏன் இதும் என்ன வேண்டும் என்று நண்பர்களிடம் சொல்லிக் கொண்டாலும் வேண்டாம் என்று சொல்லி எழுதும் மனத்தைரியம் இவனுக்கு இருக்கவில்லை.

இப்படியான மனக்காயங்களோடு அலையும் போது தான் சீதா அவனின் கண்களில் தெரியத் தொடங்கினாள். அவளைக் காணும் போது மின்சாரம் பாய்வது போல ஓர் உணர்வு.

பலநாட்கள், பலமாதங்கள், அவளுக்காக அவன் தவமிருந்தான்.

பலன் அவள் அக்காளையும் தம்பியையும் பிரிந்து அவனிடம் வந்து விட்டாள்.

ரெயில் காதல் இவர்களைத் தம்பதிகளாக்கி விட்டது. தங்களை ஏமாற்றி விட்டான் என அவளது அத்தான் கொக்கரிக்கத்

தொடங்கிவிட்டார். யாழ்ப்பாண அமைப்பு அவரை தொடரச் செய்தது.

அவன் என்ன சாதி என்டு தெரியாமல் இவள் எப்படி இருவாள்.....?

கண்டவன் நின்டவன் எல்லாம் வந்து இங்கே ஆர் என்டு தெரியாமல் கிடக்கு,....? இவனை இவளுக்கு முன்பு பின்பு தெரியுமோ,...? எளியவன் பதுங்கிப் பதுங்கி என்ன காரியம் செய்து போட்டான்.....

நான் என்னெண்டு ரோட்டாலே போறது ... எளிய....

தங்கையைப் பேசத்தொடங்கியதும் அவளால் பொறுக்க முடியவில்லை. ஏதோ வாயுக்குள் முறுமுறுத்துக் கொண்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

ஆனால்...

அவளுக்கு ஏதோ ஒரு அங்கத்தை உடலிலிருந்து யாரோ பலவந்தமாக பிடுங்கிக் கொண்டு போனதாகவே எண்ணிக் கொண்டாள்.

☆☆☆☆

சிவராஜன் ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிவிட்டான். இந்தவான இவன் கிறிஸ்தவனாக ஞானஸ்நானம் செய்து கொண்டான். மதம் மாறியதுபற்றி பல பேர் கேட்டதற்கு ஏதோ ஒரு சாட்டுப் போக்குச் சொல்லி சமாளித்துக் கொண்டான்,

ஏன்...? எதற்கு என்று சொல்ல முடியாமல் போனதற்கு இதுவும் ஒருகாரணம் என நண்பர்கள் பேசிக் கொண்டார்கள்.

(தொடர்ச்சி.பக் 36)

www.tamilarangam.net



# இலைக்கொரு போட்டி இரு தாளத்தில்



இரண்டாமாண்டு அம்மாவின் திவசம்

"இருக்கையை விட்டிறங்கி
இலையை எடுத்துக் கொண்டு
அமருங்கள்"

இலைக்கொரு போட்டி நடக்குது.

இலையெங்க வாங்கினிங்கள்?
வியட்னாம் கடைதிடையிலையோ?
இல்லை, பாக்கிஸ்தான் கடையிலையோ?

"இது தான் கூடாது,
இலங்கையிலிருந்து வந்தது.
இரண்டு இலை இருபது குறோன்கள்"

இலைக்கொரு போட்டி நடக்குது.

எச்சில்,
இலைக்கொரு போட்டி நடக்குது.

புழுதியைப்போல் ஏழைகள்
வாழ்கின்ற பாரதத்தில், இதுவொன்றும்
புதுப் போட்டியல்ல.

போட்டியாளர்கள்தான் புதியவர்கள்.

ஆம்,
ஆண்டுத்திவசத்திற்குரிய அம்மாவும்

www.tamilarangam.net



இங்கு போட்டியாளர்.

பார்த்ததொன்று, கேட்ட தொன்று
பாரினிலே இதைச் சகிக்கலாமோ.

—கரவை தாசன்.

# பூமியே!!



வருடங்கள் பல புரட்டிவிடும் பூமியே
உன் வயது தான் எத்தனை?

வருத்தங்கள் பல புகட்டிவிடும் இலங்கையே
உன் வயது தான் அதில் எத்தனை?

வாழ்ந்த மக்கள் பல கோடி இலங்கையில்
உன் பசி தீர்த்தோர்தான் எத்தனை?

வாழும் மக்கள் சில கோடி இலங்கையில்
உன் பசி தீர்க்கத்தான் எத்தனை?

விரதப்பசி ஆற நிற்கும் பூமியே!
உன் பசி தீர்க்கும் ஆண்டுகள் தான் எத்தனை?

விட்டில்களாய் பறந்து செல்லும் சிறார்களுக்கு-
பூமியே
உன் ஆறுதல் தான் கிடைத்திடுமா எம் நாட்டினிலே?

வீரமாகச் சிறகடித்த எம் ஆசைகளைப் பூமியே
உன் விலங்குகளால் பூட்டிவிட்டாய் எம் நாட்டினிலே.

—இரா. பாஸ்கரன். Hadsten.

# தேயும் வால்கள்

கீராவின் தொடர்றவினம்

சேற்றிலும் மிதிக்கலாம்;
சேதிகள் வெளிப்பரவாதவரை!

மனித நேயங்களை மறக்கப்படலாம்
Moneyயின் நேசம் வேண்டுமெனில்!!

இவையனைத்தும் அங்கீகரிக்கப்பட சமுதாய-
நெறிகள்.

ஆம்!
உண்மையே....
தியானத்தில் இருந்த கலாச்சாரத்தின் காதுகளை
இயந்திர ஆலையின் சப்தங்கள் செவிடாக்க-
முயன்ற போது



ஆலமரங்கள் எல்லாம்
நாணல்களாய் வளைந்தன.

முதுகில் சுமைகளை ஏற்றிக் கொண்டு
மார்பில் மதங்களை தாங்க முற்பட்டதால்
மனிதன் வளைந்தான்.
வளைந்தவன் முறியாதிருக்க
வளைத்து விட்டோம் – வழி வழிவந்த
பாதைகளை எல்லாம்.

நதி மூலம், ரிஷி மூலம் பார்க்காமல்
எந்த தண்ணீராவும் ஆண்டவனுக்கு
அபிஷேகம் செய்யலாம் என்றபோது....

சுரண்டல்கள்;
வலிந்திழுப்புக்கள்;
கடத்தல்கள் அனைத்துமே நியாயப்படுத்தப் பட்டன.
அன்றே, தப்பு என ஓங்கி அறைந்திருந்தால்
இன்று.... வேர்விட்டு விட்டது என அலறத் தேவையில்லை.

எங்கள் தவறுகளின் விதைப்புகளை
நாங்களே தான் அறுவடை செய்யவேண்டும்.

ஆனால்!

அதுக்கெல்லாம் அவகாசம் இருக்கவில்லை;
சந்தர்ப்பத்தை மட்டும் தவறவிடவும் இல்லை!!

எல்லைக் கோட்டின் தட்டிகளை எல்லாம்- ஆங்காங்கே எமக்காக
மெதுவாய் திறந்தது போலவே- இப்போ
எல்லைகளைக் கண்டு கொள்ளாமலே முன்னேறத்-
தலைப்பட்டோம்.

கலாச்சாரத்தை வால்களாக்கி;
சந்தர்ப்பங்களை கை, காய்கள் ஆக்கி
எட்டும் வரை தாண்டினோம்!
தாண்டிக் கொண்டேயிருக்கின்றோம்!!

வாலும் எம்முடன் இழுபடுகிறது;
தேய்ந்து கொண்டு இழுபடுகிறது;
பதாங்கமாய் அறுந்துப் போகிறது.

இப்போ....
தாவிய கொப்பும் நிலையில்லை;
தாய் மரமும் எம்மிடமில்லை.

www.tamilarangam.net



இனியும் திரும்பப்பார்க்காவிடில்
இனிமை என்று எதுவுமே
இனி எம்மிடம் இராது.

நன்றிக்கும், பாசத்துக்கும்
அகராதியில்
அர்த்தம் தேடும் நாள்
வெகு தொலைவில் இல்லை.

# பாடி முடியாத பல்லவிகள்

கல்வி முடியு முன்னே
கல்லறையில் எத்தனைபேர்.
பள்ளி முடியு முன்னே
பள்ளி கொண்டோர் எத்தனைபேர்.

துள்ளும் வயதினிலே
தூளானோர் ஆயிரம்பேர்.
தள்ளாத வயதிலே
தலை பிளந்தோர் கணக்கில்லை.

தமிழ் ஆளவேண்டும் என்று
வனம் வாழ்வோர் கணக்கில்லை.
தாய் மடியில்
மாய்ந்த
சேய்களும் தான் எத்தனையோ.

www.tamilarangam.net



வஞ்சகரால் வாழ்விழந்த
வனிதையரும் தான் உண்டு.

பஞ்சம்;
பசி;
பட்டினியால்
துஞ்சியவர் பல்லாயிரம் பேர்.

பாடி முடியாத
பல்லவிகள் இவை அன்றோ!!

விடியாத இரவுகளாய்;
விடிவுக்காய் மடிந்தவர்கள்.

கல்தோன்றாக் காலத்தின்
முன்தோன்றி வளர்ந்திட்ட;
வல்ல தமிழ் இனத்தின்
தலை விதிதான் மாறாதோ?

க. மனோகரன்

## செய்தி

புதிய நாசிஸ்ற்றுக்களின் நடவடிக்கைகளை எதிர்த்து Köln, Essen(ஜேர்மனி) என்ற இடங்களில் பல்லாயிரக்கணக்கான ஜேர்மனியப் பொதுமக்கள் 12.10.91 அன்று ஊர்வலம் ஒன்றினை நடத்தினர்.

B.B.C செய்தி.

www.tamilarangam.net


இம்முறை "கிறிஸ்மஸ்" அவனது வீட்டில் தடல்புடல் பலவிருந்தினர், சாப்பாடு அந்த மாதிரி விஸ்கியும் பியர் போத்தல்களும் சிரித்துக் கொண்டேயிருந்தது. இதமான பலவகையான குளிர்பானங்கள் அடுக்கியிருந்தன.

நேரம் ஏற ஏற போதையும் ஏறி வந்தவர்களில் சிலர் தலைதெறித்த ஆட்டம்.

ஒரு அறைக்குள் ஒரு இளைஞர் கூட்டம் அமைதியோடு பியருடன் விளையாடிக் கொண்டிருந்தனர். மனைவி பிள்ளைகளைப் பிரிந்து வந்தவர்கள் சோகமான சில பழைய பாடல்களைப் போடும்படி அன்புக் கட்டளை.

இதோ தனது சிநேகிதிகளுடன் சல்லாபம்,

சிலர் நாட்டு அரசியல் எதிர்காலம் பற்றிய விவாதங்கள். சுருங்கச்சொன்னால் ஒரு கௌரவமான 'பார்ட்டி' என்று சொல்லலாம்.

குடித்து முடித்த வெற்றுக் கிளாசுகளை சுற்று நிதானமான வெறியுடன் சிவராஜன் நிரப்பிக் கொண்டிருந்த வேளை-

ஒரு கிழமைக்கு முன்னர் ஊரிலிருந்து புதிதாக வந்த மீசைக்கார நடுத்தர வயதுடைய ஒருவன் அப்போது அங்கு வந்து அமர்ந்து கொண்டான்.

இவர்கள் எல்லோரையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். சில சாப்பாடுகள் அரையும் குறையுமாக மேசைமீதும் நிலத்திலும் கொட்டிக் காணப்பட்டது. அவனது உள்ளம் கொதித்தது. அக்கமும் பக்கமும் நோட்டமிட்டான். ஆங்கிலப் பாட்டுக்கு ஏற்ற ஆட்டங்கள் தொடர்ந்து கொண்டேயிருந்தது. இவர்களை

அழுத்த விரட்ட வேண்டும் என்று மனம் சொல்லிக் கொண்டிருந்தது. இருந்தாலும் மனதை அடக்கிக் கொண்டான்.

"தம்பி என்ன பேசாமல் இருக்கிறியள்"...?

"நீர் போய்ச் சாப்பிடும்" என்று சிவராஜன் அவனை அனு ந்தான்.

ஆனால் அவனது மனதில் ஏதோ ஒன்று உறுத்திக்கொண்டே இருந்தது.

"அண்ணே நீங்கள் இவ்வளவு காசு செலவழித்து பார்ட்டி வைக்கிறியள்.... இதிலே கொஞ்சக் காசையாவது உங்கடை அம்மாவுக்கு அனுப்பியிருந்தால் தன்ரை வயிற்றையாவது கழுவக் காணும்.

இண்டைக்கு என்ன சாப்பிடலாம் என்டு தெரியாமல் இருக்கிறியள். ஆனால் ஊரிலே என்ன இருந்தாலும் சாப்பிட்டு உயிரோடு இருக்க வேணும் என சனங்கள் விரும்புகுதுகள்.

"எங்கடை சனங்கள் சோற்றைக் கண்டு எவ்வளவு காலம் தெரியுமோ...?

நாங்கள் இங்கே எப்படியும் வாழலாம். ஆனால் எங்கடை குடும்பம் பிச்சை எடுக்கக் கூடாது. "ஆத்தை பிச்சை எடுக்க பிள்ளை கோயிலிலே அமுது கொடுத்த கதை" தான் நீங்கள் இப்ப செய்கிறது.

உங்களின்ரை அம்மாவும் தங்கையும் படும் கஷ்டங்களை என்னென்று சொல்லுறது.

உன்ரை மூளைக்குள்ளே கல்லா... மண்ணா...?

உன்னுடைய குடும்பத்தைப்பற்றி நான் சிந்திப்பதை விட நீதான் சிந்திக்க வேணும். இப்படியான நினைப்புள்ள

www.tamilarangam.net



உனது வீட்டு வாசலுக்கு வந்ததே பிழை.

முகத்துக்கு மேலே அடி விழுந்தது போல ஓர் உணர்வு. அவன் தன்னை நண்பர்களுக்கு முன்னால் அவமதித்து விட்ட எண்ணம் சிவராஜனை மௌனமாக்கிவிட்டது.

அவன் வெளியே போய்விட்டான்.

☆ ☆ ☆ ☆ ☆

இவை நடந்து சில மாதங்களின் பின்னர் தான் தாயின் இறுதி அழைப்பு அவனுக்குக் கிடைத்தது. நாட்கள் செல்லச் செல்ல, தான் பெரிய குற்றம் செய்துவிட்ட உணர்வு அவனைத் தாக்கத் தொடங்கியது.

ஏன் என்று கேட்பான் அவனுக்கே பதில் சொல்ல முடியாமல் இருந்தது.

நெஞ்சத்தில் ஏக்கம்,

சற்று மனச் சோர்வு,

ஏதோ ஒருவித உணர்வு அவனை அறியாமல் நெஞ்சத்தைக் கேட்கத் தொடங்கியது.

எல்லோரும் அம்மா அம்மா என்று பாசம் பொழியும் போது எனக்கு மாத்திரம் ஏன் இந்த உணர்வு வரவில்லை. பாசம் எங்கே போய்விட்டது....?

● தீபெத்தில் வசிக்கும் "யாக்" என்ற எருமையின் பால் இளஞ்சிவப்பாக இருக்குமாம்.

● ஒரு கோழிக் குஞ்சுக்கு 8,000க்கும் மேலான இறகுகள் முளைக்கின்றன.

(நன்றி:- இன்னும் தெரிந்து கொள்ளுங்கள்)

ஒரு பிள்ளையை வளர்க்க நாம் எவ்வளவு கஷ்டப்படும் போது எங்கள் எல்லோரையும் எப்படி அம்மா, வளர்த்திருப்பார்......?

"என்னை அம்மா நான் உனக்குத் துரோகம் செய்து விட்டேன்."
"உன்னை மறந்து விட்டேன் அம்மா"......

அமைதியாகப் படுத்திருந்தவனின் நெஞ்சத்துக்குள் வெடித்த நினைவுகள் சிதறிவிட்டது.

அமைதியோடு வெளியே வந்தான். சுவரில் மாட்டியிருந்த சுவரின் படம் அவனைப்பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.

மகனே...!
நீ என்னை வெறுத்து ஒதுக்கினாலும் என்னால் உன்னை ஒதுக்கவோ வெறுக்கவோ முடியாதுள்ளது.
ஏன்...?
நான் உனது அம்மா...

தாய் தனது தோளில் தட்டிச் சொல்வது போல ஓர் உணர்வு.
அம்மா.....
படத்திலிருந்த மாலையைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டான்.
அவனையறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் ஓடத் தொடங்கியது. பலவருடங்களாக உச்சரிக்காது மறந்து போயிருந்த வாய் அம்மா என்று அழைக்கத் தொடங்கியது.
அம்மா நான் உன்னை ஏமாற்றி விட்டேன்.
கண்ணீர் வழிந்து நிலத்தில் விழத் தொடங்கியது.
அவன் ஏன் அழுகின்றோம், அவனுக்கே புரியவில்லை,

— முற்றும் —

www.tamilarangam.net



# யார் இந்த விமலேஸ்வரன்...?



யார் இந்த விமலேஸ்வரன்...? சஞ்சீவி ஆசிரியர் குழுவில் ஒருவரின் சகோதரனா...? அல்லது யாருக்கும் வேண்டியவரா..? இப்படியான கேள்விகளும், சந்தேகங்களும் சஞ்சீவி வாசகர் வட்டத்திலும் அதற்கப்பாலும் எழுப்பப்படுவதை நாம் அறிவோம். எனவே இதற்கான விளக்கத்தைத் தர நாம் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

இவர் 1988ம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழகத்தில் வணிகபீடத்தில் இறுதியாண்டு பரீட்சையை எழுதிமுடித்தவர். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளின் சர்வாதிகார நிலைப்பாட்டுக்கெதிராக நடத்திய போராட்டத்தில் புலிகளாலேயே கடத்திச் சென்று கொல்லப்பட்ட விஜிதரனுடன் முன்னணியில் செயற்பட்டவர்.

பின்னர் விடுதலை அமைப்புக்களின் மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராகவும் தாம் விரும்பும் அமைப்புக்களில் இணைந்து செயற்படும் உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் சாகும் வரை உண்ணாவிரதத்தை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் விமலேஸ்வரன் தலைமையில் நடத்தினர். இதனால் 18.07.88இல் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார்.


எனவே தமிழ்மண்ணில் ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்த முனைந்த இந்த மனிதனுக்கு கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் சஞ்சீவி அஞ்சலி செலுத்துவது எந்த விதத்திலும் தவறாகாது என நம்புகின்றோம்.

— சஞ்சீவி —

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி இல: 16



சஞ்சீவியின் குறுக்கெழுத்துப் போட்டி இல: 16.

கேள்விகள்: இட - வலம்.

6. 19: அசுரக் குணமுடையோர் ஏழை மக்களை அடிமைகளாக்கி "இதனால்" அடித்துக்கொடுமைப் படுத்துவர்.

7. 46: ஒரு விடயம் அல்லது விடயங்கள் பற்றி "தர்க்கித்தலை" இப்படியும் கூறலாம்.

15. 2: வேட்டையின் போதும், எதிரியை மடக்குவதற்கும், பாவிக்கப்படும் ஒருவித பொறி வகையே இது.

22. 48: 200 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழக் கூடியது இது, வெப்ப நாடுகளிலேயே உள்ளன.

26. 14: சிறு குழந்தைகளை இதன் படுக்க வைத்து, தாலாட்டி உறங்க வைப்பர்.

28. 51: மலர் மாலை விற்கும் கடையினை இப்படி அழைப்பர்.

32. 47: மண் தோன்றாக் காலத்தில் தமிழன் தோன்றியிருந்தால் "இந்த நகை"யினை அணிந்திருப்பானோ?

www.tamilarangam.net



36. 49: மன்னர் காலத்தில் மட்டுமல்ல, தற்போதும் எமது தாய் நாட்டில், ஆதிக்க வெறியர்களால் மனிதனின் முக்கிய அங்கமான "இது" சேதம் செய்யப்படுகின்றது.

37. 50: ஈழத்தின் பல இடங்களில், பிரச்சனைகள் காரணமாக மக்கள் கையேந்தி "இதனை" எடுக்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

-39-: இது ஒரு கரமாகும்.

## போட்டியின் விபரங்களும், நிபந்தனைகளும்

அ. போட்டியில் கலந்து கொள்வோர் இதழின் இறுதிப்பக்கத்தில் உள்ள போட்டிக் கூப்பனை பூர்த்தி செய்து »20.01.92« திகதிக்கு முன்னதாக சஞ்சீவிக்கு அனுப்பிவைத்தல்.

ஆ. சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள், குலுக்கல் முறையில் 1,2,3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறுவதோடு, சரியான விடைகள், பரிசுக்குரியோரின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் சஞ்சீவியால் அனுப்பிவைக்கப்படும்.

**கேள்விகள்: மேல்-கீழ்**

1. 2: தற்போது இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளுள் "இதனை" வாங்குவதோ, விற்பதோ அல்லது மற்றவருக்கு எழுதிவைப்பதோ தடை செய்யப்பட்ட நிலைமையாம்.

7. 4: இலங்கை வாழ் மக்களில் பலரை, இராணுவத்தினரும், இயக்கத்தினரும் "இதற்கென" முகாம்களுக்கு கொண்டு சென்று மறியல், தண்டனை என வழங்குகின்றனர்.

7. 10: "இந்தப் பூச்சி" நெருப்பு சுட்டு எரிக்கும் போதும் வெளிச்சத்தின் ஈர்ப்பால் நெருப்பில் வீழ்ந்து இறக்கும்.

17. 14: நடனக் கலை ஒன்றின் பெயர் இதுவாகும்.

www.tamilarangam.net



20.19: வேகம் கொண்டு வீசும் காற்றுகள் சில, அவற்றில் இதுவும் ஒன்று.

22.24: "நந்த" இதன் மறு பெயர்களில் ஒன்று.

23. 4: கரிகால மன்னன் கட்டிவைத்த "இந்த" அணைக்கு - இந்தியாவில் மட்டுமல்ல உலகம் பூராக பெருமை உண்டு. அதனைக் கட்டும்போது இருந்த அடிமைகள், தொழிலாளர்கள் பற்றி எவருமே பேசுவதில்லை. ஆனால் இது குழம்பியுள்ளது.

33.31: பொறுப்பான விடயத்தினை ஒருவரிடம் ஒப்படைப்பதனால், அவரிடமிருந்து "இதனையே" எதிர்பார்க்க வேண்டும்.

33.39: ஒவ்வொரு மனிதனும், வாழ்க்கையில் முன்னேற "இது" - முக்கியம் தேவையானது. ஆனால் இது குழம்பியுள்ளது.

41.46: உயிரினங்களைச் சேர்ந்த, பல வகையான, சிறிய பறவை இனமே இது. குழம்பியுள்ளது.

☆ ☆ ☆

குறுக்கெழுத்துப்போட்டி இல: 15ன் விடைகளும், பரிசு பெறுவோர் விபரங்களும்:

3. 24: அதிகாரி
4. 10: பற்
7. 46: பண்பாடு
14. 1: அகம்
15. 41: அழுக்கம்
19. 6: கச்சை
23. 30: வாளி
36. 49: கொடுமை
44. 22: மூட்டாள்
47. 32: மராட்டி
52. 40: சினை


பதில்கள்:
இடமிருந்து-வலம்.

1. 4: அப்பம்
7. 6: பசை
7. 11: பச்சோந்தி
14. 16: அக்கா
19. 20: கண்
25. 22: அரிவாள்
28. 27: கலி
33. 30: பாட்டாளி
33. 36: பாராட்டு
41. 40: முனை
43. 46: கொடுமுடி
47. 46: மடு
50. 49: ஊமை,

பதில்கள்:
மேலிருந்து- கீழ்.

www.tamilarangam.net





1. T. MAYURAN
KRÆNTEN -31
6600 VEJEN.

2. PUSHPA SANTHIRKUMAR
AXELBROG 6A-2 TV
8700 HORSENS.

3. P. SAKTHIVEL
AXELBROG 1B. 4 TH
8700 HORSENS.

போட்டியில் கலந்து கொண்டோர்க்கும், பரிசில் பெற்றுக் கொண்டோர்க்கும், சந்தீவி வாசகர்களுக்கும் தங்கள் குழுமப் போட்டி சார்பில் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றோம். பரிசில்கள் உங்களுக்கு கூடிய கெதியில் அனுப்பி வைக்கப்படும். அன்புடன் -லோகி-

## செய்தி

ஜெர்மனியில் புகலிடம் கோருவதற்கான உரிமை துஷ்பிரயோகம் செய்யப்படுவதை விரைவில் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென ஜெர்மன் அதிபர் ஹெல்மட் கோல் அண்மையில் பகிரங்க உரையொன்றில் குறிப்பிட்டார்.

ஜெர்மனியின் செல்வத்துக்கு தமது பங்களிப்பை வழங்கிய வெளிநாட்டவருக்கு நாம் பொறுமை காட்ட வேண்டும். வெளிநாட்டவர்கள் விடுதிகள் மீதான தாக்குதல்களை நான் கண்டிக்கின்றேன்.

- வீரகேசரி -

www.tamilarangam.net



# மறுக்கப்படும் ஜனநாயகம்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களும், தமது சுயஅபிப்பிராயங்களைப் பகிரங்கமாக வெளியிடவும் அதுபற்றி ஏனையோருடன் கலந்துரையாடவும் வாய்ப்புக்கள் நிலவின. இந்த நிலை படிப்படியாக மாறி இயக்கங்கள் ஆயுதரீதியாக பலம் பெறத் தொடங்கிய போது தமது இயக்கக் கருத்தே மேலோங்க வேண்டும் என்ற முனைப்பில் அபிப்பிராய பேதம் உடையோரை மிரட்டுதல், தாக்குதல் என்று உருவாகி அழித்தல் வரை வளர்ந்தது. 1986 கடைசிப் பகுதிக்குப் பின்னர் வேறு கருத்துடையோருடன் ஆயுதங்கள் மட்டுமே பேசும் என்ற நிலை உருவாகியது. போராட்டம் ஆரோக்கியமான வழியில் செல்ல வெவ்வேறு கருத்துக்கள் முட்டி மோதுதல், விவாதத்தினூடாகத் தெளிவு பிறத்தல் என்பன அவசியமானவை. ஆனால் எமது சூழலில் இந்த நிலை இனி உருவாகுமா என்ற கேள்வி இன்று பலர் மனதிலும் உருவாகும் வகையில் அச்சம் தரும் சம்பவங்கள் நிகழ்கின்றன. எம்மிடையே மாறுபட்ட கருத்துடையோரை அழித்தல், எமது பொது எதிரியான இலங்கை அரசுக்குப் பலம் சேர்க்குமேயன்றி எமது விடுதலைக்கு ஒரு போதும் உதவாது.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் யாவும் ஜனநாயக உரிமைகளை உள்ளடக்கிய புரட்சிகர குணாம்சமாகும். அந்தத் தேசிய இனத்துக்குள் ஜனநாயக உரிமைகளே மறுக்கப்படுமாயின் அது ஜனநாயகத் தன்மையை இழந்து பாசிச வடிவை எடுக்கின்றது. இதற்குச் சிறந்த உதாரணம் அண்மையில் நடந்த சம்பவங்கள் பல. **எமது** ஜனநாயகத்துக்கான குரலை கொச்சைப்படுத்தி வேற்று இயக்கக்காரர்கள் என எம்மை முத்திரை குத்த முனைவார்களேயானால் அது அவர்களின் அரசியல் கைநாட்டுத் தனத்தையே குறிக்கும்.

— சஞ்சீவி

www.tamilarangam.net



# கதகளி

பேட்டி: முரளி





சென்ற ஆனிமாதம் கொல்ஸ்ரப்போ நகரிலே தொடர்ச்சியாக இரண்டு கிழமை நடைபெற்ற "கலாச்சார வாரம்" என்ற கலைநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வந்த இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கதகளிக் கலைஞர்களை இங்கு சஞ்சிகையின் சார்பில் பேட்டி காண்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஒடின் தியெட்டரில் தொழில்புரியும் நண்பன் S. புஸ்பராஜாவின் ஒழுங்கின் பிரகாரம் தான் எமக்கு இந்தப் பேட்டி எடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 12.06.1991 வியாழக் கிழமை பின்னேரம் சுமார் 4மணியிருக்கும். அவர்கள் தங்கியிருந்த இடத்துக்கு நண்பன் புஸ்பா அழைத்துச் சென்றார். என்னோடு நண்பர் P.ஜேசுரட்ணம் அவர்களும் வருகை தந்திருந்தார்.

கதகளி நடனக்குழுவின் பொறுப்பாளர் திரு. ஜோன், திருமதி மேரிஜோன், பாடகர் திரு உண்ணிக் கிருஷ்ணன், துணைப்பாடகர் திரு.சிவப்பிரகாஸ், செண்டா வாசிக்கும் திரு பாலசுந்தர், மத்தளம் வாசிக்கும் திரு சுரேதரன் ஆகிய ஆறு பேரும் எமது வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இன்று காலை (௨.06.91) இரண்டு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டும் மாலை 6 மணிக்கும் இன்னும் இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிருக்கும் விடயம் எமக்குத் தெரிந்ததால் அவர்களை சிரமப்படுத்தாது வேளைக்கு பேட்டியை எடுத்து விட வேண்டும் என முனைந்தேன்.

பேட்டியைத் தொடங்கியவுடனே இந்தியாவிலே கதகளி பற்றி விரிவுரையாளராகக் கடமை புரியும் திரு உண்ணிக்கிருஷ்ணன் அவர்கள் பதிலளிப்பது நல்லது என எல்லோரும் வேண்டிக் கொள்ள அவர் மனமுவந்து முன் வந்தார்.

"எனக்கு மலையாளம் சம்சாரிக்கான் அறியுமில்லை, ஞான் அறிந்நதை நிங்களோடை சஞ்சிவியோடு சம்சாரிக்கான்".

கேள்வி:- "கதகளி" அதன் வரலாறு பற்றிச் சொல்லுங்களேன்...?

பதில்:- இந்த நடனம் ஏறக்குறைய 500-600 வருடங்களுக்கு முற்பட்டது. கேரளாவின் வடபகுதியை ஆண்டுவந்த கொக்கட்டான் தம்பிரான் என்ற அரசன் காலத்தில் "கிருஷ்ணாட்டம்" என்ற ஒரு நடனம் வழக்கத்தில் இருந்து வந்தது. அப்போது தென்பகுதியை அரசாண்ட சாமோதி ராஜா என்ற அரசன் அந்த நடனத்தைச் சென்று பார்க்க விரும்பிய போது வடபகுதி அரசன் அதற்கு அனுமதியளிக்கவில்லை. நீங்கள் இதைப் பார்ப்பதற்கு அருகதையற்றவர்கள் என்றும் வேறுபல காரணங்களைக் கூறியும் அனுமதி மறுக்கப்பட்டது. இதன் காரணத்தினால் தென்பகுதி அரசன் கோபமடைந்து தனது பகுதியில் "ராமனாட்டம்" என்ற ஒரு நடனத்தை தொடக்கி வைத்தார். அந்த ராம ஈட்டம் தான் இன்று கதகளி என்ற பெயரில் ஆடப்பட்டு வருகின்றது.

www.tamilarangam.net


கேள்வி:- இந்த கிருஷ்ணாட்டம், ஸ்ரீராமநாட்டம், இரண்டும் ஒரேவகையான நடனமா? அல்லது வேறுபட்டவையா..?

பதில்:- இரண்டும் வித்தியாசமான நடனம் என்று தான் சொல்ல வேண்டும். கிருஷ்ணாட்டத்தில் தனித்து இராமாயணக் கதைகள் மாத்திரம் தான் சொல்லப்படுகின்றது. வேறு எந்தக் கதைகளும் சொல்லப்படுவதில்லை. ஆனால் ஸ்ரீராமனாட்டத்தில் இராமாயணக்கதைகளோடு மகாபாரதக் கதைகளும் இன்று சாதாரண வாழ்க்கைக் கதைகளையும் சொல்லும் அளவிற்கு, எமது நாட்டுக் கதைகள் மட்டுமல்ல சேக்ஸ்பியரின் கதைகள் போன்ற வெளி நாட்டு கதைகளையும் சொல்லுமளவிற்கு இருக்கின்றது.

இவற்றை விட கிருஷ்ணாட்டத்தில் சமஸ்கிருத மொழிப்பாடல்கள் மட்டுமே பாவிக்கப்படுகின்றது. அந்த மொழியானது பெரிய பெரிய மகான்களால் மாத்திரம் புரிந்து கொள்ள முடியும், சாதாரண மக்களுக்கு என்ன சொல்லப்படுகின்றதே தெரியாது. ஆனால் ராமனாட்டத்தில் பாவிக்கப்படும் பாடல்கள் அந்தந்த இடத்து மொழிகளாலே பாடப்படுகின்றது. இதனால் சாதாரண பாமரமக்களுக்கும் கதையில் என்ன சொல்லப்படுகின்றது என்பது தெளிவாகப் புரியும்.

மேலும் கிருஷ்ணாட்டத்தில் பொய்முகங்களை (முகமூடி) வைத்து ஆடுகின்றார்கள். இதனால் ஆடுபவரின் உண்மையான முகபாவத்தை அறிந்து கொள்ள முடியாது. ஆனால் ஸ்ரீராமநாட்டத்தில் ஆடுபவரின் முகத்திலே வர்ணங்களைப் பூசி ஆடுவதால் உண்மையான முகபாவங்களை வெளிக்காட்டக் கொள்ள முடியும். இந்தக் கலையின் முக்கியத்துவமே மனதிலுள்ளதை முகத்தின் மூலம் வெளிப்படுத்துதல் தான். அதாவது அகத்தின் அழகு முகத்தில் தெரிய வேண்டும்.

கேள்வி:- கதகளியின் விசேட தன்மைகள் ஏதாவதுண்டா...?

www.tamilarangam.net


பதில்:- கதகளியில் சொல்லக் கூடிய ஐந்து முக்கிய விடயங்கள் காணப்படுகின்றது. 1."பச்சா", 2. "கத்தி" "கரி" "தாடி" "மினுக்கு" பச்சா என்றால் நல்ல தெய்வாம்சம் பொருந்திய வேடங்களை ஏற்று நடிப்பதைக் குறிக்கும்.

கத்தி என்றால் அசுரத் தன்மைகளையும், வீரமான பாத்திரங்களையும் ஏற்று நடிப்பதைக் குறிக்கும்.

கரி என்றால் இராட்சத தன்மைகள், பூதங்கள், பேய்கள் போன்றவற்றை வெளிக்காட்டுவது. இதிலே ஒரு பெண் பாத்திரம் என்றால் அதற்கு மார்4 வைத்து வித்தியாசமாகக் காட்டப்படும் மற்றது எல்லாம் ஒன்று தான்.

தாடி என்றால் சமுகத்தில் கூடாத ஆணுக்குரிய பாத்திரங்களைக் குறிப்பதாகும். அத்தோடு வீரம் பொருந்திய பாத்திரங்களை ஏற்று நடிப்பதைக் குறிக்கும். உ+ம்: துச்சாதனன், வீரபத்திரன் போன்ற பாத்திரங்களைக் குறிப்பிடலாம்.

இந்தத் தாடியானது இரண்டு வகைப்படும்.

1. சிவந்த தாடி. 2. வெள்ளைத் தாடி.

சிவந்த தாடி என்றால் மேற்குறிப்பிட்ட பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்களுக்கும், வெள்ளைத் தாடி என்றால் தனித்து அனுமான் பாத்திரத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படும்.

மினுக்கு என்றால் தனித்த பெண் பாத்திரங்களுக்கும் முனிவர்மாரின் பாத்திரங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

இப்படியான பல தன்மைகளைக் கொண்டு இந்தக் கதகளி அமைந்திருந்ததால் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது.


கேள்வி:- எப்படியானவர்கள் இக்கலையில் ஈடுபடலாம்?

பதில்:- முதலில் இக்கலையில் ஈடுபடுபவர்களுக்கு கலை வாசம்

வேண்டும். 10-13 வயதில் பழக்கத் தொடங்க வேண்டும். ஆரம்பப்படிப்பாக ஆறுவருடங்கள் கட்டாயமாகப் பழக்க வேண்டும். பின்பு பயிற்சிகள் மூலமும், நிகழ்ச்சிகள் செய்து பெறும் அனுபவ மூலமும் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் அதிகாலை 3மணிக்கு எழுந்து பயிற்சிகளைச் செய்து பழக வேண்டும். இதற்குரிய பயிற்சிகள் மிகவும் கடுமையானது. உடம்பை இலகுவாக்குவதற்கு சில விசேட மஜாச் வகைகளைச் செய்வதன் மூலமும் நான் நடனத்தை இலகுவாக ஆடமுடியும். கடுமையான பயிற்சிகள் காரணமாகத்தான் சிறுவயதிலிருந்தே ஆரம்பிக்கப் படுகின்றது.



A CLASS OF KATHAKALI



BODY EXERCISES

கேள்வி:- இந்திய நடனங்கள் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா..?

பதில்:- கேரளாவில் கதகளி தமிழ்நாட்டில் பரதநாட்டியம், ஆந்திராவில் குச்சுப்பிடி கர்நாடகத்தில் யக்ஸகானம் போன்ற நடனங்கள் இந்தியாவில் பிரசித்தி பெற்ற முக்கியமான நடனங்கள் என்று சொல்லலாம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்குவதற்கு இப்போது நேரம் காணாது என நினைத்துக் கொள்கின்றேன். ஆனால் இந்தியாவின் சகல நடனங்களும் நாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படையில்

www.tamilarangam.net


தான் உருவானவை என்பது குறிப்பிடத் தக்கது.

கேள்வி:- இப்போது இந்த நவீன உலகத்தில் சினிமா. V.D.O போன்ற துறைகளாலும், வேறு வெளிநாட்டு மோகங்களாலும் உங்கள் கலைக்கு ஏதாவது தாக்கங்கள் உண்டா..?

பதில்:- தாக்கங்கள் நிறைய இருக்கின்றது தான். ஆனாலும் கதகளியில் மக்கள் வெறுப்படையாமல் தொடர்ந்து பழகிக் கொண்டு தான் வருகின்றார்கள். அதாவது காலத்துக்கு காலம் மாறிமாறி மெருகூட்டப்பட்டு வருகின்றது. ஆனால் எந்த வித அடிப்படையும் மாறாமல். எல்லாக் கலைகளுக்கும் ஏற்பட்ட தாக்கம் எமது கலைக்கும் ஏற்பட்டது தான். ஆரம்ப காலத்தில் இந்தியாவுக்குப் பிரித்தானியரின் வருகையால் அந்தக் கலை முழுமையாகவே அற்றுப் போனது. பின்பு திரு மகாகவி வள்ளத்தோள் என்பவரது முயற்சியாலும் அக்காலத்து அரச சபையில் இருந்த திரு முகுந்த ராஜா என்பரது முயற்சியாலும் கதகளி புதுப் பொலிவு பெற்று பின்பு பிரபல்யம் அடையத் தொடங்கியது. இன்று வெளிநாட்டவர்கள் கூட வந்து பயிலும் அளவிற்கு எமது கலை உலகளாவி பிரசித்தம் அடைந்திருக்கின்றது.

கேள்வி:- இக்கலையானது தனிப்பட்ட வைபவங்களுக்கும் நடாத்தப்படுகின்றதா?

பதில்:- முன்பு கோவில்களில் மாத்திரம் தான் ஆடப்பட்டு வந்தது. ஆனால் இப்போது பல பொதுவான சாதாரண இடங்களில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

கேள்வி:- இத்துறையில் பெண்கள் ஈடுபடுவதாக இல்லையே ஏன்?

பதில்:- முன்பு இதைப் பெண்கள் ஆடுவதில்லை, ஆனால் இப்போது வெளிநாட்டவரும் எமது கலையைப்பற்றிப் பேசத் தொடங்கியதால் சில பெற்றோர்கள் ஒரு வகை நாகரீகம் என நினைந்து பிள்ளைகளைப் பழக்க அனுப்புகின்றார்கள். உங்களுக்கும் இது நன்கு விளங்கலாம். சிலபேர் உண்மையிலே கலையார்வத்தால் ஒரு கலையை அறிய முற்படுகின்றார்கள், சிலபேர் அந்த வாசமே இல்லாமல் ஒரு நாகரிகத்துக்காகப் பழக்க முனைகின்றார்கள்.

கேள்வி:- இந்த நடனத்துக்குப் பயன்படும் இசை சம்பந்தமாக கொஞ்சம் சொல்ல முடியுமா..?

பதில்:- முதலில் மூன்று வருடகாலம் கர்நாடக சங்கீதம் பழக்க வேண்டும். பின்பு கொஞ்சக்காலம் நடனத்துக்குரியவை எனப் பழக்க வேண்டும். அதாவது கர்நாடக இசையோடு சேர்ந்துத் தான். கர்நாடக சங்கீதமானது பக்திமயமானது. கதகளி இசை வந்து அபிநய சங்கீதம் என்று வழங்கப்பட்டு வருகின்றது. அதாவது பாவங்களை விளங்கக் கூடிய வகையில் பாட வேண்டும்.

இதில் இன்னொரு விடயமும் சொல்லலாம் என நினைக்கின்றேன். ஆரம்ப காலங்களில் கதகளி ஆடுபவர்கள் தான் பாடியே ஆடியும் வந்தார்கள். ஆனால் காலப் போக்கில் அது பல கஸ்ரங்களைக் கொடுத்த படியினால் "பாடுவர்" என்று தனியாக வந்தது. அதாவது பாடி ஆடுபவர் சரியான முகபாவங்களை வெளிக்காட்ட முடியாத சிரமம் தான்.

கேள்வி:- இதற்குப் பயன்படும் இசைக்கருவிகள் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா..?

பதில்:- "செண்டா" "செங்கிலா" "மத்தளம்" "இலத்தாளம்"

www.tamilarangam.net


போன்ற நான்கு கருவிகள் மாத்திரம் பாவிக்கப்படுகின்றது. இசைநாடகத்தில் இரண்டு மத்தளம் மாத்திரம் பாவிக்கப்படுகின்றது.

கேள்வி:- இந்தக் கொல்ஸ்ரப் போ மன்றில் நிகழ்ச்சிகள் செய்வது பற்றி என்ன கருதுகின்றீர்கள்..?

பதில்:- இந்த நாட்டு மக்கள் மத்தியில் எங்கள் கலையைக் காட்டுவதற்கு கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். அத்தோடு உங்கள் எல்லோரையும் சந்தித்தது மிகமிக சந்தோசம். அதுமட்டுமல்ல, இந்த கொல்ஸ்ரப் போ மன்று தான் டென்மார்க்கிலே கலைகளுக்குப் பேர் போன இடம் என அறியும் போது மிகவும் சந்தோசமடைகின்றோம்.

கேள்வி:- உங்களது வெளியுலகப்பயணம் இதுதானா முதற்தடவை?

பதில்:- இல்லை... இதற்கு முன்னர் அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, கனடா, மெச்சிக்கோ, ஸ்பெயின், கொலண்ட், பெல்ஜியம் போன்ற பல நாடுகளுக்குப் போய் வந்திருக்கின்றோம்.

கேள்வி:- எப்படியான அழைப்பின் பேரில் டென்மார்க் வந்தீர்கள்?

பதில்:- இத்தாலியில் இருக்கும் "Teatro Tascabile" என்ற தெருக்கூத்துக் கலைஞர்கள் இந்தியாவுக்கு வந்து எமது கல்லூரியில் நடனம் பயின்றார்கள். அவர்கள் தான் எமது நிலையப் பொறுப்பாளர் திரு. ஜோன் அவர்களோடு தொடர்பு, அங்குள்ள ஒடின் தியேட்டர் மூலம் இங்கு வந்து சேர்ந்தோம். எமது பொறுப்பாளர் திரு ஜோன் அவர்கள் அடிக்கடி இத்தாலிக்குச் சென்று கதகளி பற்றி படிப்பித்துவருகின்றார். என்பது இங்கு

www.tamilarangam.net



குறிப்பிடத் தக்கது.

கேள்வி:- பொதுவாக ஐரோப்பிய கலைகள் பற்றி ஏதாவது கூற முடியுமா...?

பதில்:- இங்கு வந்த போது ஒரு நாடகம் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. என்னென்று சொல்வது... சில இடங்களில் முழு-மையாக நிர்வாணமாகவே நடித்தார்கள். எங்களால் இ-தை நம்பமுடியாமலே இருந்தது. எல்லாக் கலைகளும் அந்-தந்த நாட்டுக் கலாச்சாரங்களோடு தான் பின்னிப்பிணைந்திருக்கின்றதல்லவா...? எமது நாட்டில் ஒரு சாதாரண சினி-மாப் படத்திலே ஏதாவது ஒரு சிறு ஆபாசம் இருந்தால் அதை வெட்டி விடுகின்றார்கள் ஆனால் இங்கே....

கேள்வி:- பொதுவாக இலங்கைத் தமிழர்கள் இந்தியா வந்தா-ல் அந்த நாட்டுத் தமிழர்கள் எங்களைப் பார்த்து நீங்கள் என்ன கேரளாவா என்று கேட்பதுண்டு. இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.?

பதில்:- உண்மை தான். இது எங்களுக்கும் நன்கு தெரியும். ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரையிலும் புவியியல் ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் எமக்குள் ஏதோ ஒற்றுமை இருந்திருக்கின்றது என நினைக்கின்றோம்.

கேள்வி:- இந்த நாட்டு வாழ் தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில்:- இந்த நாட்டுக்கு ஏன் வந்துள்ளீர்கள் என்பது எமக்குத் தெரியும். சொந்த நாட்டிலேயே சந்தோசமாக வாழமுடியாத

www.tamilarangam.net



ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இங்கு உற்றார் உறவினர்களைப் பிரிந்து வாழ்வது கவலைக்குரிய விடயம். மிக விரைவில் பிரச்சினைகள் முடிந்து சந்தோசமாக எல்லோரும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

— முற்றும். —

இந்தக் கலைஞர்களோடு கதைகள் பற்றி வேறுபல கேள்விகளையும் பகிர்ந்து கொண்டோம். இடநெருக்கடி காரணமாக சில கேள்விகளையும் அதற்கான பதில்களை மாத்திரமே இங்கு பிரசுரித்துள்ளோம்.

# ஈழத்தில் இருந்து ஒரு கடிதம்
# தொடரும் கடத்தல்கள்.......

தீப்பொறி அமைப்பை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன், பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட 10பேர் மே மாதம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவதற்கு முன்னர் மீண்டும் 4 பேர் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 30ந் திகதியன்று யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த த.செல்வநிதி, மனோகரன், இன்னொரு பெண் (பெயர் தெரியவில்லை) உட்பட வவுனியா மாவட்டப் பாடசாலையொன்றின் ஆசிரியர் தில்லைநாதன் ஆகியோரே புலிகளால் கடத்தப்பட்டோராவர்.

கவிஞரும் பெண்ணிலைவாதியுமான த.செல்வநிதி (செல்வி, தமயந்தி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுபவர்) கலைப்பீட 3ம் வருட மாணவியாவார். 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தொகுதியில் வரும் கவிஞர்களில் ஒருவரான இவர் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் உறுப்பினரும் ஆவார். யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்கனவே புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரையாளர் ராஜனி திராணகமவினால் ஸ்தாபிக்கப்பட்ட 'பூரணி' பெண்கள் நிலையத்தின் பராமரிப்பாளர்களில் ஒருவராகவும் விளங்கினார். இப் பூரணி நிலையமும் ஏனைய பொது நிறுவனங்களைப் போலவே புலிகளால் 'விழுங்கப்பட்டது' தெரிந்ததே.

(தொடர்ச்சி பக்-56)

www.tamilarangam.net



செல்வி, புளொட்டின் உட்கட்சி ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள் காரணமாக தான் அங்கம் வகித்த அதன் பெண்கள் அமைப்பில் இருந்து ஒதுங்கினார் 'தோழி' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த செல்வி புளொட்டின் பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவார்.

30ம் திகதி செல்வி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற புலிகள் தாம் அவரை ஒன்றரை மணி நேரத்தில் 'விசாரித்துவிட்டு' விடுவதாகக் கூறி அழைத்தார்கள். வீட்டார் அனுப்பமுடியாது என மறுக்கவே அவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்றுள்ளனர். நாடக அரங்கவியல் விசேட பட்டப்படிப்பு மாணவியும், நாடகங்களில் ஆர்வமுடன் பங்கேற்று நடிப்பவருமான செல்வி, பெண்கள் சம்பந்தமான பெங்களூர் மகாநாட்டிற்கு மறைந்த பெண்ணிலைவாதியும், கவிஞருமாகிய சிவரமணியுடன் சென்று கலந்துகொண்டவர். ஆனால் புலிகளோ, தம்மைப் பற்றிய தகவல்களை வெளியிலுள்ள பத்திரிகையாளர்கட்கு அனுப்புபவர் என்றும், கிறிஸ்தவ நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர் என்றும் குற்றம் சாட்டி அவரைக் கடத்தியுள்ளனர். புலிகளின் 'அலுவலகங்களில்' இக்கடத்தல் குறித்து விசாரித்தபோது 'உயிருக்கு ஆபத்தில்லை!' என்று மட்டும் கூறினர்.

வணிகபீட மாணவரான மனோகரனையோ, ஆசிரியர் தில்லைநாதனையோ கடத்தியதற்கான காரணம் புலிகளால் அறிவிக்கப்படவில்லை. எனினும் கேசவனுடன், பல்கலைக்கழக மாணவர்களான கோவிந்தன், சிறீனிவாசன் ஆகியோர் கைது செய்யப்பட்டபின்னர் புலிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்திய 'கொள்கை' (கொலை?) விளக்கக் கூட்டத்தின் முடிவில் அவர்களை மன்னித்துவிட முடியாதா? என்ற கேள்வியை எழுப்பியவர் இந்த மனோகரனே என்பது குறிப்பிடத்தக்கது. (இதுபற்றி எமது முதலாவது பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

புலிகள் தங்களின் இத்தகைய சனநாயக விரோத பாஸிஸத்தனமான நடைமுறைகளினூடாக எமது தேசத்தில் பல்வேறு துறை சார்ந்த புத்திசீவிகளையும், சனநாயகவாதிகளையும், போராளிகளையும் ஒன்றில் கொன்றோ, நாடுகடத்தியோ அல்லது சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தோ தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். தமிழீழ விடுதலையானது புலிகளுக்கும், காடிகளுக்கும்தான் சொந்தம் என்று புலிகள் நினைக்கிறார்கள் போலும். மனிதர்களே அற்ற ஒரு தேசத்தில், மனிதத்துவத்தின் புதைமேட்டின்மீது புலிக்கொடியை நாட்டி ஆட்சி செலுத்தும் வெறி புலிகளுக்கு இருப்பது பற்றி யாரும் பேசாமல் மௌனமாக இருப்பது எத்தனை நாளைக்கு?


உங்கள் ஒவ்வொருவருக்குமான சவக்கிடங்கையும் நீங்களே வெட்டுங்கள் எனப் புலிகள் உத்தரவிடும்வரை கேள்விகள் கேட்காமல் இருக்கப்போகிறோமா?

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் என முழங்குவோம். புலிகளின் காட்டுமிராண்டித்தனத்தை அம்பலப்படுத்துவோம். தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவருடைய உரிமை மட்டுமல்ல, கடமையும்கூட இது.

நண்பர்கள் (ஈழம்)

எந்நேரத்திலும் கொல்லப்படக்கூடிய சூழலில் இருந்து வரும் இப்பிரசுரத்தை இயன்றவரை பரவச் செய்யுங்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல:16



உங்கள் கருத்துக்கள்

அலுவலகப் பாவனைக்கு:

www.tamilarangam.net

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

C17-NR16

Afs.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"CHANCHIVE"
Postbox:1205
7500 Holstebro
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்